# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 19ம் நாள் (05-11-2025 புதன்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீன 27 ஆவது குருமணிகள்
சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

# தமிழ்ப் பெருமன்னன் இராச இராச சோழனின்
# 1040 ஆவது நாண்மங்கலம் – ஐப்பசி சதயப் பெருவிழா




படம் - ஓவியர் சின்னன் தெய்வேந்திரன் மதுரை



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org



## சைவத் தமிழ்த்துறையில் ஆவணக்காப்பும் ஆராய்ச்சியும் அவசியம்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

சைவத் தமிழ்த்துறையில் குறிப்பாக இலங்கையில் ஆவணக் காப்பும், ஆராய்ச்சியும் வெற்றிடங்களை நிரப்பி இன்னமும் மேன் மையடைய வேண்டும். தொன்றுதொட்டு தமிழர்கள் தம் படைப் பினை, தம்முடன் மட்டும் நிறுத்திவிடாது எதிர்கால சமூகத்தினரும் பயன்படுத்தவேண்டும் என்று பலவகையான திட்டமிடல்களைச் செய்து வந்துள்ளனர். ஆவணங்களை மற்றும் தகவல்களைப் பேணிப் பாதுகாப்பது, அவற்றை அடுத்த தலைமுறைக்கு ஊடு கடத்துவது மிகவும் இன்றியமையாதது.

எட்டாம் நூற்றாண்டில் உதித்த சுந்தரமூர்த்தி நாயனார், இறைவன் அடியார்களை (நாயன்மார்களை) ஆவணப்படுத்தி அவர்தம் பெருமைகளை உலகறியச் செய்ய திருவுளம் கொள்ள, இறைவனே "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடி யேன்" என்று அடியெடுத்து கொடுத்தார் என்பது வரலாறு. இதுவே திருத்தொண்டத்தொகையாக நாயன்மார்களின் நீட்சியை அவர்களின் பெருமைகளை முதற்குறிப்பாக இவ்வுலகு பெற்றுக்கொண்டது. பின்னர் இதனை அடிப்படையாக வைத்து, நம்பியாண்டார் நம்பி அவர்கள் "திருத்தொண்டர் திருவந்தாதி" எனும் சைவ இலக்கிய நூலைப் படைத்தார். இதில் நாயன்மார்களின் குறிப்புக்களை விரித்து அந்தாதிமுறையில் வெளியிட்டார். பின்னர் 12 ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் சுவாமிகள், இதனை அடிப்படையாக வைத்து "பெரியபுராணம்" எனும் விரிவானை நூலைப் படைத்தார். உலகின் ஆவணக்காப்பு முறைமைக்கு இதுவே முன்னுதாரண மாகும். ஒரு தொடர் முறைமையாக 400 வருடங்களுக்கு மேலாக ஒருவருடன் ஒருவர் நேரடித் தொடர்பு இல்லாமல் திருவருள் துணை யுடன் இது அமையப்பெற்றது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பல அருட்செயல்களில், இதையும் ஒரு முக்கியமான செய்தியாக நாம் எடுத்து, சுவாமியின் எண்ணத் தில் வந்தவற்றை, இந்தகாலப்பகுதியிலும் சிரசில் கொண்டு அடியார்களை மற்றும் கோயில் வரலாறுகள், சைவத்தமிழ்ப் பெரியோர்கள், சங்கங்கள் அவற்றின் செயற்பாடுகள், வாழ்வியல் முறைமைகள் போன்றவற்றை ஆவணப்படுத்தவேண்டும். நூல கம் நிறுவனத்தினர் தம்மால் இயன்றவற்றை இந்தத்தளத்தில் செய்துவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக சைவத்தமிழ் ஆராய்ச்சியை எடுத்துக்கொண் டால், இந்த விடயத்தில் இலங்கையில் உள்ள தமிழ்மொழி சார் பல்கலைக்கழகங்கள் அதீத ஆர்வம் எடுத்து, எவை எவைக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்ற ஒரு கட்டமைப்புக்குள், காலத்தின் தேவைக்கு ஏற்றாற்போல், ஆராய்ச்சிகளை மேற் கொண்டு, அவற்றின் முடிவுகளை சமூகத்திற்கு பயனுள்ளதாக வெளிப்படுத்தவேண்டும். நாற்பது ஆண்டுகாலமான போராட்டத் தால் ஏற்பட்ட வெற்றிடத்தினை இதன்மூலம் சரிசெய்து, வரலாற்று மற்றும் பண்பாட்டு நீட்சியையும் மீட்டுருவாக்கம் செய்ய முடியும்.

எனது நீண்டநாள் ஏக்கங்களில் ஒன்று, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த **"இந்து மன்றம்" (Hindu Board)** என்ற அமைப்பு தொடர்பான ஆவணங்களைக் கண்டெடுத்து, இந்துக் கல்லூரிகளை அரசிடம் கையளிக்கும் போது என்னென்ன வரையறைகளுக்கு இணங்க கையளிக்கப்பட்டன என்பதை அடிப்படையாகக்கொண்டு, இந்துக் கல்லூரிகள் (இந்து->சைவம்) மற்றும் சைவ வழியில் இயங்கும் பாடசாலைகளின் ஒரு குழுமம் மீண்டும் உருவாக் கப்பட்டு, பாடசாலை மற்றும் மாணவர்களின் இயங்குநிலை சைவப் பண்பாட்டின் அடிப்படையில் தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்யவேண்டும். இது ஒன்றும் புதிதல்ல, இலங்கையில் உள்ள ஏனைய எல்லா மதங்களுக்கும் இப்படியான வரையறை, குழு, நிர்வாகம், சபைகள் என்று மிகவும் கட்டுக்கோப்பான நிர்வாகக்கட்ட மைப்பு இருக்கிறது, இயங்குகிறது. இது ஏனைய மாவட்டங்களுக் கும் பொருந்தும். இதனை அனைத்து சைவத் தலைவர்களும் வேற்றுமையில் ஒற்றுமையாய் ஒன்றிணைந்து உருவாக்கவேண்டும் என்று தாழ்மையாக விண்ணப்பம் வைக்கிறேன்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(06-10-2025) – தென்னாட்டின் அறுபத்து இரண்டாவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299, கன்னி நல்லோரை, புரட்டாசித் திங்கள் 20ம் நாள் நிறைமதி அன்று (06.10.2025 – திங்கட்கிழமை) நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சிவத்திரு. ஐயம்பிள்ளை தயானந்தராசா அவர்கள், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் சிவத்திரு. பத்மநாதன் மயூரன் அவர்கள், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மூத்த விரிவுரையாளருமான சைவப்புலவர் சி.கா. கமலநாதன் அவர்கள் மற்றும் அடியார்கள் பலர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சிவத்திரு. ஐயம்பிள்ளை தயானந்தராசா அவர்கள், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் சி.கா. கமலநாதன் அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் அறுபத்து இரண்டாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து, ஏனையோருக்கும் இதழ்கள் வழங்கப்பட்டன.

மேலும், கலந்து கொண்ட விருந்தினர்களையும், தென்னாடு மடத்தின் சிவப்பணிகளுக்காக முழுநேர அடியாராக புதிதாக இணைந்துள்ள சிவத்திரு. பழனியாண்டி சிவஞானமூர்த்தி ஐயா அவர்களையும் சிறப்பித்து கௌரவிக்கும் நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வில், சிவத்திரு. பழனியாண்டி சிவஞானமூர்த்தி ஐயா அவர்கள், தொடக்க உரையாக தனது அறிமுக உரையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(14-10-2025) – தமிழ்நாடு சேலம் அறுபத்துமூவர் சிவனடியார் திருக்கூட்டத்தின் அடியார்கள் 54 பேர் தென்னாட்டிற்கு வருகை தந்து ஐம்பூதநாதருக்கு பூவும் நீரும் இட்டு வழிபாடு ஆற்றினார்கள். அடியார்களுக்கு திருவமுது செய்விக்கப்பட்டதுடன், தங்கியிருந்து தொடர்ந்து வழிபாடுகளில் கலந்து கொண்டார்கள். (18-10-2025) – ஐப்பசித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (22-10-2025) – கந்தன் கவின் அறுமைப் பிறைநாள் (கந்தசஷ்டி) தொடக்க நாள் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(27-10-2025) – எங்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில், ஐப்பசித் திங்கள் 10 ஆம் நாள் தொடக்கம் 18 ஆம் நாள் வரையான காலத்தில் (27-10-2025 தொடக்கம் 04-11-2025 வரை), உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவனாகிய இறைவனின் மலர் சிலம்படி நிழலெய்திய திருத்தொண்டர்கள் அறுபத்து மூவரின் வரலாற்றை எடுத்துரைத்து தெய்வச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த பெரியபுராணத்தை முற்றோதல் செய்து வழிபட திருவருள் கூடியிருந்தது.

அதற்கான தொடக்க நாள் விண்ணப்ப முற்றோதல் வழிபாடுகள் காலை 8.30 மணியளவில் ஐம்பூதநாதர் வழிபாட்டுடன் இடம்பெற்றன. தொடர்ந்து ஒன்பது நாட்கள் முற்றோதல் வழிபாடுகள் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 2.30 மணி வரை நடைபெற்றதுடன் அடியார்களுக்கு அமுது செய்வித்தலும் சிறப்பாக இடம்பெற்றது.

(27-10-2025) – கந்தன் கவின் அறுமைப் பிறைநாள் (கந்தசஷ்டி) நிறைவுநாள் வழிபாடுகள் திருமஞ்சனத்துடன் சிறப்பாக இடம்பெற்றன. (01-11-2025) – தமிழ்ப் பெருமன்னன் இராசஇராச சோழனின் 1040 ஆவது சதய விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. (03 -11-2025) – ஐப்பசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(04 -11-2025) – பெரியபுராண முற்றோதல் நிறைவும் திருமூலர் குருபூசையும் வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன. இந்நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாட்டிலிருந்து பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி மீ. சிவசண்முகம் ஐயா அவ்ரகளுடன், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மூத்த விரிவுரையாளருமான சைவப்புலவர் சி.கா. கமலநாதன் அவர்களும், ஓதுவார் பெருமக்களும், அடியார்கள் பலரும் கலந்து திருவருள் பெற்றிருந்தனர்.

**திருச்சிற்றம்பலம்**

# சைவமும் தமிழும் உலகெலாம் பரவிட உருவான தருமை ஆதீனத்தின் 27ஆவது குருமுதல்வரின் மணிவிழா ஐப்பசிப் புனர்பூசம்



### தருமபுரம் அறிமுகம்

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டசந்தானத்தில், சந்தான குரவர்களில் நான்காமவரான உமாபதி சிவம் அவர்களின் பின்னர், அவரின் மாணாக்கரான அருள்நமச்சிவாயர் அவர்களின் மாணாக்கர்களின் ஒருவரான காழிக் கங்கை மெய்கண்டார் அவர்களின் வழியில் ஏழாவதாக வந்த குருஞான சம்பந்தரால் ஆரம்பித்து வைக்கப்பட்டதே தருமபுரம் ஆதீனம் ஆகும். 16 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சுமார் 1560 ஆம் ஆண்டளவில் தருமபுரம் ஆதீனம் நிறுவப்பட்டது.

பண்டை நற்றவத்தால் தோன்றிய குருஞானசம்பந்தர் கல்லாமலே கலை ஞானங்களை பெற்றிருந்தார். திருமுறைகளையும், சாத்திரங்களையும் தாமே ஓதி உணர்ந்து வந்தார். தனது பருவவயதில் மதுரையில் தங்கியிருந்து சொக்கநாதரையும் மீனாட்சி அம்மனையும் வழிபாட்டு வந்தார். சிவ பூசை செய்ய விரும்பிய குருஞானசம்பந்தருக்கு சொக்கநாதப்பெருமானே இலிங்கவடிவமாக எழுந்தருளி பொற்றாமரைக் குளத்தில் வெளிப்பட்டு, அவர் கைகளுக்கு எட்டினார். இந்த இலிங்கத்தினையே இன்றும் தருமபுர ஆதீனத்தில் தினமும் பூசித்து வருகின்றனர்.

இதனை சுவாமிகளே சொக்கநாதக் கலித்துறையில் பாடலாக பாடியுள்ளார்.

**கண்ணுக்கினிய பொருளாகியே என் கரத்தில் வந்தாய்**
**விண்ணும் பரவிடும் அற்புதமே என்ன விஞ்சையிதான்**
**மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண வாரியுள்ளே**
**நண்ணும்படி செய் மதுராபுரிச் சொக்க நாயகனே**

இவரது குருவாகிய கமலை ஞானப்பிரகாசர் இவருக்குரிய ஞானத்தினை சொக்கநாதரின் ஆணைப்படி (கனவில் இறைவன் இட்ட கட்டளை) முழுமையாக உரைத்து, மயிலாடுதுறை அருகே யமதர்மராசன் வழிபட்டு பேறுபெற்ற தருமபுரம் சென்று மடம் அமைத்து, தங்கியிருந்து **“சைவமும் தமிழும் வளர்த்து வருவாயாக”** என்று வாழ்த்தி அனுப்பினார். அங்கே சுவாமிகள் மடம் அமைத்து ஞான ஆட்சி செய்துவந்தார். இவரது காலத்தில் பசுவும் புலியும் ஒருதுறையில் நீர் பருகின என்று பெருமையாக கூறுவார்.இப்படி உருவான ஞானக்கோயிலே தருமபுர ஆதீனம் ஆகும்.

### மணிவிழாக் காணும் 27 ஆவது குருமகாசந்நிதானம்

குருஞானசம்பந்தர் சுவாமிகளால் தோற்றுவிக்கப்பட்ட தருமைக் குருமரபு, 26 ஆவது சீர்வளர்சீர் சண்முக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் முத்தியின் பின்னர் ஞான ஆட்சிக்கு வருகிறார், மணிவிழாக் கோன்



திருக்கயிலாய பரம்பரை, திருநந்திமரபு, மெய்கண்ட சந்தானம், சிவஞானசித்திநெறி, துறவறம், சித்தாந்த சைவஞான சுவாதீனமாய் திருச்சடாமகுடம் தாங்கிய, திருந்திய செங் கோல் செலுத்தி அருளாட்சி நடத்திவரும் தருமபுரம் ஆதீனம் 27ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

இவர் நடுநாடு திருஎருக்கத்தம்புலியூரில் முற்றறிவு ஆண்டு ஐப்பசித் திங்கள் முதலாம் நாள் (17-10-1965) புனர்பூசம் நாள்மீன் அன்று, சுபநாளில் சிவத்திரு. மறைஞானசம்பந்தம் பிள்ளை மற்றும் அலர்மேலுமங்கை அம்மை பெற்றோருக்கு மூத்த தவப்புதல்வராய் பிறந்தார். வேல்முருகன் என்பது பிள்ளைத் திருநாமம். சிறுவயதில் வளையமாதேவியில் வளர்ந்து, சீர்காழியில் கல்வி பயின்று, தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளுக்கு சற்பாத்திர ராகி 23 ஆம் வயதில் துறவறம் ஏற்று, குமாரசாமி தம்பி ரான் எனும் திருநாமம் பூண்டு,மூவகை தீக்கைகளும் பெற்று ஞானவாழ்க்கையை திறம்பட வாழ்ந்து வந்தார்.

13-12-2019 இல் ஞானபீடம் ஏற்றருளியது முதல் 5 ஆண்டு களில் ஓய்வறியாமல் உழைத்துத் தருமை ஆதீனத்தின் 27 திருக்கோயில்களில் திருப்பணி, மேலும் 120 உபகோயில் களுக்கும் உடனாகத் திருப்பணி மற்றும் வெளிக்கோயில் களுக்கும் தேவையானவற்றை செய்து 500 திருக்கோயில் களுக்கு நானிலம் போற்றும் வண்ணம் குடமுழுக்கினை நடத்திக் காட்டியவர்கள்.

மேலும் திருக்கோயில்களுக்கு, கற்றளிகள், தேர், வெள்ளி ரதம், வாகனம், கொடிமரங்கள், திருவாபரணங்கள் என்று முன்பு உள்ளவற்றை திருத்தியும், புதியதாகச் செய்தும் கொடுத் துள்ளார்கள். முன்பிருந்த ஆதீனக் கட்டளை மடங்களைப் பொலிவித்தும், மற்றும் புதிதாக அமைத்தும் மேற்பார்வை செய்து வருகிறார்.

சுவாமிகள், சீர்காழி திருக்கோயில் திருப்பணியின்போது அரிய திருமுறைச் செப்பேடுகள் கண்டருளியவர்கள். ஒரு கோடி முறை பதிகம் ஓதிட, இருகோடிமுறை பஞ்சாட்சரம் எழு திட, 11 இலட்சம் முறை உருத்திர மந்திரம் ஓத ஆணையிட்டும் தாமே முன் நின்றும் நிறைவேற்றியவர்கள். மணிவிழா ஆண் டில் திருத்தல வழிபாடாற்ற 27 நாட்களில் நாடு, நகரம், கிரா மம், வயல், வனம், கடல், மலை, வானம் என்று 7000 கி.மீ பயணங்கள் மேற்கொண்டு பாடல்பெற்றதலம், வைப்புத் தலம் என ஒரே சுற்றில் 450 திருக்கோயில்களில் வழிபாடு ஆற்றியும் ஆறு மாதங்களில் சிற்றூர் ஆலயங்களாக 1008 கோயில்களை வழிபட்டும், மானோசரோவர் முதல் மாமகம் வரை, குடகுமுதல் குமரிவரை ஆயிரமாயிரம் தீர்த்தங்களில் சென்றாடிய புண்ணியச் சீலர் இவர்.

கொரோனா நோய் தொற்றுக் காலத்தில் மக்களுக்கான மருத்துவ சேவை மற்றும் அவர்ளுக்கு கஞ்சி வழங்கியும் மறு புறம் வைத்தியநாதசுவாமி திருக்கோயில் திருகுடமுழுக்கும் செய்தும் அத்துடன் கொரோனா நோய் அகல, உயிர்கள் இன்புற்று வாழ பிரார்த்தித்து இன்று வரை அடிஅடித்து இறைவனிடம் விண்ணப்பம் செய்பவர்.


குருமகாசந்நிதானங்களுடன் தென்னவன் (ஆச்சாள்புரம்)

சைவப் பேரரசராக திகழும் சீர்வளர்சீர் 27 ஆவது கயிலை குருமணிகளின் மணிவிழாவினை முன்னிட்டு 01-11-2025 முதல் 10-11-2025 வரை கலை, இலக்கிய மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டு பல பெருமக்களும் அழைக்கப்பட்டுள்ளனர். மேலும் 6-11-2025 முதல் 10-11-2025 வரை சொக்கநாதர், குருமுதல்வர், 27ஆவது குருமணிகள் ஆகிய குரு இலிங்க சங்கம மூர்த்திகளுக்கு 8 கால யாக பூசைளும் நடைபெற்று, ஐப்பசித் திங்கள் 24 ஆம் நாள், புனர்பூச விண்மீன் அன்று (10-11-2025) மணிவிழா சிறப்புநீராட்டும் நடைபெறவுள்ளன.

ஆதீன சுவாமிகளின் மணிவிழா சிறப்புறவும், சுவாமி கள் பல்லாண்டு காலம் இப்புவியில் ஞானவாழ்வு வாழ்ந்து கமலை ஞானப்பிரகாச சுவாமிகள் இட்ட கட்டளையின் வழி சைவமும் தமிழும் வளர்த்து, இன்னும் பல கோயில்களில் திருக்குட நன்னீராட்டுச் செய்து, தருமை மடத்தினை மேலும் சீர்செய்து, பல பல பதிப்புகளை மற்றும் மீள்பதிப்புகளைச் செய்து, தருமை ஆதீன மரபு மற்றும் ஆதீனம் தோன்றிய நோக்கங்கள் மென்மேலும் வளர்க்க எல்லாம்வல்ல கொக்கு வில் தென்னாடு ஐம்பூதநாதப் பெருமானையும், ஆலவாய் சொக்கநாதப்பெருமானையும் வேண்டி விண்ணப்பம் வைக் கிறேன்.

**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்**
**முதல்வர் - தென்னாடு சிவமடம்**

# குறித்த மொழியில் தான் வழிபட வேண்டும் என்றில்லை என்பதை இராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு விழாவில் எடுத்துரைத்த இந்தியத் துணை சனாதிபதி




கோவை பேரூரில் உள்ள ஆதீன மடத்தில், 24 ஆம் குருமகா சந்நிதானம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு நிறைவு புகழரங்க விழா கடந்த 28.10.2025 அன்று சிறப்பாக நடைபெற்றது. இவ்விழா, பேரூர் ஆதீன மடத்தில் அமைந்துள்ள முத்தமிழ் அரங்கத்தில் நடைபெற்றது.

விழாவில் பண்ணாரி அம்மன் குழுமத் தலைவர் பாலசுப்பிரமணியம் வரவேற்புரையாற்றினார். பேரூர் ஆதீனம் 25 ஆம் பட்டம் சாந்தலிங்க மருதாசல அடிகளார் தலைமையேற்று ஆசியுரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இந்திய குடியரசுத் துணை சனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு, பேரூர் ஆதீனம் மருதாசல அடிகளார் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து, மயில் தோகை தலைப்பாகை சூட்டி கௌரவித்தார். அதன் பின், துணை சனாதிபதி, 24ஆம் பட்டம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து வழிபட்டார். விழா நிறைவில், அவர் பேரூர் ஆதீன சன்னதியில் வழிபாடு செய்தார்.

இவ்விழாவில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன், பேரூர் ஆதீன மருத்துவமனை அறங்காவலர் குழுவினர், பேரூர் கல்லூரி நிர்வாகக் குழுவினர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

விழாவில் உரையாற்றிய துணை சனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள், **“இறைவன் முன் அனைவரும் சமம். இறைவனை உணர முடியும், ஆனால் கண்ணால் காண முடியாது. குறித்த மொழியில் தான் வழிபட வேண்டும் என்றில்லை.”** என்று வலியுறுத்தினார்.

அவர் மேலும், **“பிற மொழிகளை எதிர்த்து பேசுவதால் தமிழ் வளரும் என்பது அறியாமை. சமசுகிருதத்தை எதிர்ப்பதால் தமிழ் வளராது; அதேபோல, தமிழ் தீண்டத்தகாத மொழி என கூறுவதால் சமசுகிருதம் வளராது.”** என்று கூறினார்.

பேரூர் ஆதீனம் தமிழ் வளர்ச்சிக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் அளிக்கும் பங்களிப்பு குறித்து பாராட்டிய துணை சனாதிபதி, **“ஆன்மிகம் தழைத்தால் தான் மகத்தான சமுதாயம் உருவாகும். அதனைப் பேரூர் ஆதீனம் தன்னலமின்றி செய்து வருகிறது.”** என்று புகழ்ந்தார். மேலும், பேரூர் ஆதீனத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள மருத்துவமனை ஏழை எளிய மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கி வருகிறது எனவும், மருதாசல அடிகளார் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று சாதி வேற்றுமைகளை ஒழிக்கும் வகையில் ஆன்மீகப் பிரசாரங்களை மேற்கொள்கிறார் எனவும் அவர் பாராட்டினார்.

அவர் தொடர்ந்து, **“தமிழ் வளர்ச்சிக்காக பேரூர் தமிழ் கல்லூரி மேற்கொள்ளும் ஆராய்ச்சிப் பணிகள் குறிப்பிடத்தக்கவை. ஆன்மீகமும் கல்வியும் இணைந்து வளர்வது தான் உண்மையான சேவை”** என்று கூறினார். தனது உரையின் நிறைவில் துணை சனாதிபதி, **“பேரூர் ஆதீனத்தின் ஆன்மீகத் தொண்டும், சமுதாயத் தொண்டும், தமிழ் தொண்டும் பல ஆண்டுகள் நீடித்து, மக்களை விழிப்புணர்வுடன் வழிநடத்தட்டும்”** என்று வாழ்த்தினார்.

# சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்



யாழ்ப்பாணம் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் ஏழூர் அரங்கில், நாவலர் வழியில் சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் 2025 அக்டோபர் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வு சைவப்புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

விழாவிற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேதநாயகம் அவர்கள் கலந்து கொண்டு தேசியக்கொடியை ஏற்றி வைத்து விழாவைத் தொடங்கி வைத்தார். பின்னர் மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் சிவத்திரு. இ. கணேசானந்தன் பாடசாலைக் கொடியையும், அறக்கட்டளையின் தலைவர் சிவத்திரு. த. தயானந்தன் அறக்கட்டளைக் கொடியையும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து விருந்தினர்கள் சைவப்புலவர் சு.செல்லத்துரை மற்றும் ஏழூர் இராசரத்தினம் ஆகியோரின் திருவுருவச்சிலைகளுக்கு மாலைகள் அணிவித்து மரியாதை செலுத்தினர்.



மெய்கண்டான் அதிபர் இ. கணேசானந்தன் வரவேற்புரையில், செல்லத்துரை ஐயா அவர்கள் **“தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைத்த பெரியார்”** என்று பாராட்டினார். அறக்கட்டளையின் தலைவர் த.தயானந்தன் தலைமையுரையில் “சைவமும் தமிழும் செழித்தோங்கப் பாடுபட்டவர் சைவப்புலவர் செல்லத்துரை ஐயா” எனக் குறிப்பிட்டார்.

விழாவில் அருட்சகோதரி வேஜி எட்வேட்ராஜா, வைத்தியர் செல்லத்துரை பிரசாத், வைத்திய கலாநிதி பரா.நந்தகுமார் ஆகியோர் நினைவு மற்றும் சிறப்பு உரைகளை நிகழ்த்தினர். நீரழிவு நோய் குறித்த நினைவுப் பேருரை நூலாக அச்சிடப்பட்டு வழங்கப்பட்டது.

இந்த ஆண்டுக்கான **“தமிழ்வித்தகர்”** விருது மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியையுமான திருமதி சிவகாமி தர்மபாலா அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவருக்கு பொன்னாடை, மாலை, பொற்கிழி அணிவித்து, பிரதம விருந்தினர் விருதினை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்களின் பேச்சு, கதாப் பிரசங்கம் போன்ற கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. **“திருமந்திர விருந்து - பகுதி 3”** நூல் வெளியிடப்பட்டு, அதனை வைத்தியர் பரா. நந்தகுமார் மற்றும் அருட்சகோதரி வேஜி எட்வேட்ராஜா பெற்றுக்கொண்டனர்.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியம் நடாத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழா நிறைவில் செயலாளர் செல்லத்துரை மாவிரதன் நன்றியுரை நிகழ்த்தி பங்களிப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**தகவல் - கலாபூசணம் க.க.அருந்தவராஜா (மேழிக்குமரன்)**

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடு



செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



# சைவ ஞானப்பரம்பரையை போற்றுவோம்!

சைவப் பேரொளியை ஞானப்பரம்பரையாக தமிழ் மண்ணில் மட்டுமன்றி, உலகெங்கும் பரப்பிவரும் தொன்மைச் சிறப்புமிகு தருமபுர ஆதீன குருமணிகளின் மணிவிழா நிகழ்வை, ஈழத் திருநாட்டிலே, அதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள கொக்குவில் அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயில், தென்னாடு சிவமடத்தில் ஏற்று நடத்த இருப்பதையிட்டு, **“தென்னாடு”** சைவ சமயத் திங்கள் இதழாகிய நாம் உள்ளம் பூரிப்படைகின்றோம்.

திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீன திருமுறைச் செப்பேடு கண்டெடுத்த 27வது குருமணிகள் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த குருமணிகளின் மணிவிழா, தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இடையேயான ஆன்மீகப் பிணைப்பை மேலும் உறுதிசெய்யும் ஒரு திருவருட் பெருநிகழ்வாகும். சைவத்தின் மூலப்பரம்பரை ஆசியும் அருளும் நிரம்பிய தருமை ஆதீனம், வெறும் மடமாக மட்டும் இயங்காமல், சமயம், தமிழ், கல்வி, சமூகப்பணி எனப் பல்கிப் பெருகும் அறப்பணிகளின் மைய மாகத் திகழ்கிறது. குறிப்பாக, ஆதீனம் பல நூற்றாண்டுகளாகத் திருமுறைகள், சைவ சித்தாந்த நூல்கள் போன்ற அரிய தமிழ் நூல்களை அச்சுப் பதிப்பித்து வெளியிட்டு, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பங்காற்றி வருகிறது. செந்தமிழின் தொன்மை யையும், செழுமையையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த குருமணிகள் ஆற்றிவரும் பங்கு மகத்தானது. கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் எனப் பல சமூகச் சேவைகளையும் ஆதீனம் ஆற்றிவருவது, அதன் அருட்பெருந் தன்மையை உணர்த்தும்.

தருமை ஆதீனம், தமிழ் மக்களிடையே பண்பாட்டுக் காவ லரனாகவும், அறப்பணிகளின் மையமாகவும் விளங்குகின்றது. உலகெங்கிலும் புலம்பெயர்ந்து வாழும் சைவத் தமிழர்கள் தங்கள் வேர்களை மறக்காமல் இருக்க, மடங்கள் ஆற்றும் தொண்டு அத்தியாவசியமானது. தருமை ஆதீனம் போன்ற மடங்கள், ஈழ மண்ணில் கால் பதிப்பதன் மூலம், இங்குள்ள இளம் தலை முறையினர் தங்கள் சமயக் கடமைகளையும், தமிழ் மரபின் சிறப்பையும் உணர்ந்து செயல்பட தூண்டுகோலாக அமை கின்றன. சைவ சித்தாந்தம் காட்டும் சமத்துவம், ஈகை, இறைநெறி ஆகியவற்றைப் பரப்பி, சமுதாயத்தில் அமைதியையும், ஆன்ம பலத்தையும் வளர்க்கும் இப்பெரும் பணியை, குருமணிகள் தொடர்ந்து வழிநடத்திச் செல்கிறார்கள்.

இந்த மண்ணில், ஆதீன குருமணிகளின் மணிவிழா நிகழ்வு நடைபெறுவது என்பது, ஈழத்துச் சைவ அன்பர்களுக்குக் கிடைத்த மிக உயரிய ஆன்மீகப் பேறாகும். நீண்டகாலமாகச் சைவ நெறியை உயிராகக் காத்து வரும் யாழ்ப்பாணத்து மக்களுக்கு, குருமணிகளின் அருளாசி, புதியதோர் நம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிக்கும்.

சைவத் தெளிவின் தேவையும் நம் கடமையும் இன்றைய நவீன உலகில், மக்கள் வாழ்வியலில் பல சவால்களையும், வேகமான மாற்றங்களையும் எதிர்கொள்கின்றனர். இச்சூழலில், சைவம் காட்டும் அன்பு, அறம், ஒழுக்கம் என்னும் பாதையில் வாழத் துணைநிற்கும் ஆன்மீகத் தலைவர்களின் ஆசிகள் மிகவும் தேவை. இளைய தலைமுறையினர், நமது சமய மரபுகளையும், திருமுறைப் பண்புகளையும் ஆழமாக அறிந்து கொள்ள, இத்த கைய உன்னத நிகழ்வுகள் மிக முக்கியப் பங்காற்றுகின்றன.

தருமபுர ஆதீனத்தின் குருமணிகளின் மணிவிழா நிகழ்வைப் போற்றி மகிழும் நாம், அவர் காட்டிடும் குரு, லிங்க, சங்கம பூசையையும், சைவ சித்தாந்த நெறியையும் பின்பற்றி, நமது இல்லங்களிலும் சமுதாயத்திலும் சைவ ஒளியைப் பரப்ப உறுதி யேற்க வேண்டும்.

தென்னாடு சைவ மடத்தில் நடைபெற இருக்கும் இந்த மணிவிழா நிகழ்வில், சைவ அன்பர்கள், மாணவர்கள், ஆன் றோர்கள் என அனைவரும் திரளாகக் கலந்துகொண்டு, அருளாசி பெற்றுச் செல்லுமாறு மனதார அழைக்கின்றோம். குருமணி களின் அருளாட்சி மேலும் பல ஆண்டுகள் நீடித்து, சைவ சமயம் தழைக்க, எல்லாம் வல்ல ஐம்பூதநாதப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்



# திருமுறை கண்ட சோழன் மாமன்னர் இராசராசர் விழா

அரன்பணி அறக்கட்டளை, கோவை, பெருமையுடன் முன்னெடுத்த **"திருமுறை கண்ட சோழன் மாமன்னர் இராசராசர் விழா"** கடந்த 01.11.2025 சனிக்கிழமை அன்று, காலை 9.00 மணிக்கு கோவை அவிநாசி சாலையில் அமைந்துள்ள இந்துஸ்தான் கல்லூரி கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

சைவப்பண்பாட்டில் திளைத்த மாமன்னர் இராசராச சோழனின் ஆட்சிக்காலம் சைவத்தமிழின் தொன்மை வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படுகிறது. திருமுறைகளைத் தொகுத்து சைவ சமயத்தை நிலைநிறுத்திய அந்த மன்னனின் பெருமையை நினைவு கூரும் வகையில் இவ்விழா நடத்தப்பட்டது.

விழா திருவிளக்கு வழிபாட்டுடன் தொடங்கி, வரவேற்புரையுடன் சிறப்பாக தொடங்கியது. விழாவிற்கு தலைமை தாங்கியவர் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன தம்பிரான் வேலப்ப தேசிகர் சுவாமிகள் அவர்கள்.

ஆசியுரை வழங்கியவர் தெய்வீக சிந்தாந்த இலக்கிய மன்றத் தலைவர், அருட்குருநாதர், 'ஒளியகம்' ந. ஒளியரசு ஐயா அவர்கள். வாழ்த்துரை வழங்கியவர் கோவை கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழக வேந்தர் இராச. வசந்தகுமார் ஐயா அவர்கள். கருத்துரை வழங்கியவர் அரன் பணி அறக்கட்டளைத் தலைவர், பவானி ஞானாசிரியர் சிவ. அ. தியாகராசன் ஐயா அவர்கள். சிறப்புரை வழங்கியவர் தஞ்சாவூர் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் முனைவர் கோ. தெய்வநாயகம் ஐயா அவர்கள். விழாப்பேருரை வழங்கியவர் காந்திய சிந்தனையாளர் திரு. தமிழருவிமணியன் ஐயா அவர்கள். மேலும், ஞானபாரதி வெ. அனந்தகிருட்டிணன் ஐயா அவர்கள் விழா தொகுப்புரையாற்றினார்.

இவ்விழாவில் **"மாமன்னன் இராசராசர் விருது"** சிறந்த சைவப் பணியாளர்கள் மற்றும் சமூக அர்ப்பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. விருது பெற்றவர்கள்,

- **'கலைமாமணி' திருத்தணி ந. சுவாமிநாதன் ஓதுவார் மூர்த்திகள்**
- **சிவ. மு. செந்தில் சிவாச்சாரியார்**
- **சிவ. அ. சண்முகம் மெய்க்காவலர்**
- **சிவ. தேவகி உழவாரத் திருப்பெண் (தர்மபுரீசுவரர் திருக்கோயில், பழையாறை, வடதளி)**
- **சிவ. இரா. மணிகண்டன், நிறுவனர், கோவை குளங்கள் பாதுகாப்பு அமைப்பு.**

விழா நிறைவில் நன்றியுரை வழங்கப்பட்டு, அன்னம் பாலிப்பும் நடைபெற்றது.

திருவள்ளுவர் ஆண்டு 1016 முதல் 1043 வரை 27 ஆண்டுகள் மட்டுமே ஆட்சி புரிந்த இராசராச சோழன் காலமே பொற்காலம் என்று இன்றளவும் போற்றப் பெறுகின்றது. சைவத்தில் திளைத்த இராசராசர், அதன் வெளிப்பாடாக ஆட்சி முறை, இராணுவம், நுண்கலை, கட்டிடக்கலை, இலக்கியம், நீர் மேலாண்மை, உழவாண்மை என எல்லாவற்றிலும் ஏற்றத்தைத் தந்தார். வெறும் ஆறே ஆண்டுகளில் அவர் உருவாக்கிய கற்றளியே ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் அயலாரும் வியக்கும் நம் தஞ்சைப் பெரிய கோயில். இராசராசர் இருந்ததாலேயே இன்று நமக்குத் திருமுறைகள் இருக்கிறது.

அத்தகைய இராசர் தம் இராசர், இராசராசரை நன்றியோடு நினைவு கூற, அரன்பணி அறக்கட்டளை முன்னெடுத்த இவ்விழா, சைவ மரபின் பெருமையையும், தமிழ்மண்ணின் பண்பாட்டு ஒளியையும் மறுபடியும் வெளிப்படுத்திய நினைவூட்டும் நிகழ்வாக அமைந்தது.

**திருச்சிற்றம்பலம்**

# சொற்சிலம்பம்-8

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | | | | | |
| | ■ | | ■ | 03 | | | |
| | ■ | 04 | | | 05 | | ■ |
| | ■ | | ■ | 06 | | | ■ |
| | ■ | 07 | | | 08 | | |
| 09 | | | | ■ | | ■ | ■ |
| 10 | | | | | | ■ | 11 |
| | ■ | 12 | | | ■ | ■ | |

### இடமிருந்து வலம்

*01.* மார்கழியில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் சைவ எழுச்சி விழா
*03.* ஆன்மாக்களின் தலைவன்
*04.* பத்திநெறி தழைத்தோங்கிய நிலப்பரப்பு
*06.* கிளையைத் தங்குவது
*07.* இலக்குவன் பின்தொடர்ந்தது
*08.* இறைவனை அர்ச்சனை செய்ய உகந்தது.
*09.* திருஞானசம்பந்தர் எதிர்த்து வென்ற சமயம்
*10.* தெய்வ அலங்காரத்திற்காக பலவகை மலர் கொண்டு தொடுக்கப்படுவது
*12.* அன்பின் உயர் வடிவம்

### மேலிருந்து கீழ்

*01.* திருப்பெருந்துறை கோயிலை அமைத்தவர்
*02.* நெற்றிக்கண்ணை குறிக்கும் புராணம்
*03.* ஊழ்வினையை இப்படியும் சொல்லலாம்
*05.* சீர்காழித் திருத்தலம்
*11.* மும்மலங்களால் ஆட்கொள்ளப்பட்டது.

**பாடசாலை மாணவர்கள், மேலே உள்ள சொற்சிலம்பத்தை பிரதிசெய்து, அதனைப் பூர்த்தி செய்து, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், கல்விகற்கும் தரம் மற்றும் பிரிவு, தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல்பக்க பிரதியையும் இணைத்து அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்ட தகவல்கள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். வெற்றியாளர்களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசிலும் அனுப்புதல் தபால் செலவும் வழங்கப்படும். அனுப்பும் போது கடிதஉறையின் மேல்மூலையில் 'சொற்சிலம்பம்' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.**

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**
**கார்த்திகைத் திங்கள் 14 ஆம் நாள் (30-11-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# சொற்சிலம்பம்-7

**(கடந்த திங்கள் சொற்சிலம்பத்திற்கான விடைகள்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 க | ல் | லா | ல | 02 ம | ர | ம் | ■ |
| ங் | ■ | 03 கா | மி | ய | ம் | ■ | ■ |
| கை | ■ | ல | ■ | 04 ன் | ம | ர | 05 பி |
| கொ | ■ | யை | ■ | ■ | ■ | ■ | ர |
| ண் | 06 வி | ர | 07 த | ம் | ■ | ■ | ம |
| டா | து | வ | வ | ■ | 08 று | யி | ஞா |
| ன் | ர | ர் | ம் | ■ | 09 ம் | த | ன |
| ■ | ன் | ■ | ■ | 10 க | ன் | ம | ம் |

### இடமிருந்து வலம்

*01.* தென்கயிலையின் தலவிருட்சம்

*03.* பலன் விரும்பி செய்யும் கிரியை

*04.* உந்திக் கமலத்தில் உதித்தோன். (திரும்பி)

*06.* மனம் கட்டுப்பட கைக்கொள்வது

*08.* ஒளிமுதல் (திரும்பி)

*09.* செல்வம் (குழம்பி)

*10.* வினைப்பயன்

### மேலிருந்து கீழ்

*01.* இராசேந்திர சோழனின் பெயர்

*02.* கட்டடக்கலையின் கடவுள்

*03.* சிவனின் உருத்திர வடிவங்களில் ஒன்று

*05.* கடவுளைப் பற்றிய அறிவு

*06.* பாண்டுவின் சகோதரன்

*07.* உயர்ந்த ஆன்மீக பயிற்சி

# சிவபுராண விளக்க உரை



சைவ சமயத்தின் அடிப்படை நூல்கள் 12 திருமுறைகளும் 14 சாத்திரங்களும். சாத்திர நூல்கள் பொருள் நூல்கள் என்றும் திருமுறைகள் புகழ் நூல் என்றும் போற்றப்பெறும். இறைவனுடைய பெருமையையும் கருணையையும் புகழ்ந்து பாடும் நூல்கள் திருமுறைகள். இந்த திருமுறைகள் வரிசையில் எட்டாம் திருமுறையாக அமைய பெற்றிருக்கும் நூல்கள் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையுமாகும். திருவாசகத்தில் 658 பாடல்கள் 51 தலைப்புகளில் தரப்பட்டுள்ளன. முதல் தலைப்பு சிவபுராணம். சைவர்கள் ஆகிய நம் அனைவரும் சிறுவயதே மனனத்தில் விளங்கிய பகுதி சிவபுராணம். நமச்சிவாய வாழ்க என்று ஆரம்பிக்கும் இந்தப் பகுதி 95 வரிகள் உடையது. இந்தத் திருவாசகத்தை பொருள் உணர்ந்து பயில வேண்டும் என்ற நோக்கில் உரை ஆசிரியர்கள் பலர் உரை செய்துள்ளனர்.

அதில் குறிப்பிடத் தகுந்தவர்கள் மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர் மற்றும் மகாவித்துவான் முதுவர் சி.அருணை வடிவேலு முதலியார் ஆவர். மகாவித்துவான் சி. அருணை வடிவேலுகர் அவர்கள் எழுதிய திருவாசக உரை திருவாவடுதுறை ஆதீனத்தால் வெளியிடப்பெற்றது. மகாவித்துவான் சி.அருணை வடிவேலு முதலியார் அவர்கள் செய்த திருவாசக உரை தருமபுரம் ஆதீனத்தால் வெளியிடப்பெற்றது. இந்த இரண்டு நூல்களும் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்பட்ட போது மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர் எழுதிய உரையைவிக்ரமசிங்கபுரம்சிவஞானசுவாமிகள் பேரவை மறு பதிப்பு செய்து வெளியிட்டுள்ளது. இது பெரும் புலவர்களின் உரையை தழுவி சிவபுராணம் பகுதிக்கு மட்டும் உரைகாண அடியேன் முயற்சி செய்கிறேன்.



பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி
மீ.சிவசண்முகம்,
கோயம்பத்தூர்,
தமிழ்நாடு.

**“நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க**

**கோகழியாண்ட குருமணி தன் தாள் வாழ்க**
**ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க**
**ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க..."**

என்று தொடங்குகிறது.

**நமச்சிவாய வாழ்க:** நமச்சிவாய என்பது தலையாய மந்திரம். மந்திரம் என்று சொன்னால் நினைப்பவரை காப்பது என்பது பொருள். மந்திரங்களிலேயே உயர்ந்த மந்திரம் நமசிவாய என்பது ஆகும். பன்னிரு திருமுறைகளிலும் பல இடங்களில் இம்மந்திரம் போற்றப்பட்டுள்ளது. தேவாரம் அருளிச் செய்த மூவர் பெருமக்களும் நமச்சிவாய பதிகங்கள் பாடியுள்ளார்கள். பின்னர் வந்த ஒன்பதாம் திருமுறையிலும் **"அற்புத தெய்வம் இதனின் மற்றுண்டே அன்போடு தன்னை அஞ்செழுத்தின் சொற்பதங்கள் வைத்து உள்ளம் அள்ளூலும் தொண்டர்க்கு"** எல்லா செல்வங்களும் கைகூடும் என்று சொல்கிறது.10, 11, 12 திருமுறைகளிலும் பல இடங்களில் அஞ்சு எழுத்தின் மந்திரத்தின் பெருமைகளை காண முடிகிறது.

நமச்சிவாய மந்திரத்தையே கொண்டு எட்டாம் திருமுறை ஆரம்பமாகின்றது. இது ஒரு தனிச்சிறப்பு. நம்மை வாழ்விக்கும் அந்த மந்திரம் வாழ்க. வாழ்க என்பதன் பொருள் வாழ்த்துதல், வணங்குதல், பொருளியல்பு உரைத்தல் என மூன்றாக வரும். தம்மை விட இளையோரை வாழ்த்துதல் என்பது ஆசீர்வதிப்பது. நம்மை விட பெரியவர்களை வாழ்த்துகள் என்பது வணங்குதலை குறிக்கும். பின்னை பிறவி அலுக்க நெறி தந்த பித்தர்க்கும் பல்லாண்டு கூறுதுமே என்பது அவனை வணங்குதல் என்ற பொருளில். எனவே இங்கும் அந்த மந்திரத்திற்கு வணக்கம்.

நமச்சிவாய என்பது சிவபெருமானின் நாமமும் ஆகும். **"எந்தையார் திருநாமம் நமசிவாய என்று எழுவார்க்கு இரு விசும்பில் இருக்கலாமே"** என்பது அப்பர் திருவாக்கு. **"நக்கன் நாமம் நமச்சிவாயவே"** என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு. எனவே பெருமானின் நாமம் ஆகிய நமச்சிவாயத்தை வணங்குகிறேன் என்பதும் பொருள்.

**நாதன் தாள் வாழ்க:** நாதன் - தலைவன் என்பது பொருள். குருநாதனும் ஆம். உயிர்கள் அனைத்திற்கும் தலைவனாக விளங்கும் சிவபெருமானே உயிர்களை ஆட்கொள்ள வரும் போது மானுடச் சட்டை தாங்கி குருநாதராக வருவான் என்று நூல்கள் போற்றுகின்றன. மாணிக்கவாசகர் வரலாற்றிலும், சிவபெருமான் குருநாதராக எழுந்தருளி வந்து திருபெருந்துறையில் மாணிக்கவாசகரே ஆட்கொண்ட பின். எனவே தலைவனாகவும் குருநாதன் ஆகவும் விளங்குகின்ற அவன் திருவடிகளுக்கு வணக்கம்.

**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க:** இமை - **"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை"** என்பது தொல்காப்பியர் சூத்திரம். கண்ணிமைப்பொழுது ஒரு மாத்திரை எனப்படும். அந்த ஒரு மாத்திரை பொழுது கூட இறைவன் நம்மை விட்டுப் பிரியாமல் இருக்கிறான். அவனுடைய கருணை திறம் அவ்வாறு இருக்கிறது. நம்முடைய நெஞ்சில் நிற்பது அவனுடைய தொழிலாக மவாசகர் பாடுகிறார். என் நெஞ்சில் என்பது என்னுடைய நெஞ்சிலும் (அவனுடைய குரு தரிசனமும் உபதேசமும் கிடைக்கப் பெற்றும் அவனை விட்டுவிட்டேன் ஆயினும் அவன் கருணையினால்) என தம்முடைய இழிவு நிலையை காட்டுமாறு அமைந்துள்ளது. கேவல நிலையில் இருந்து சுத்த நிலை வரை இறைவன் ஒரு பொழுதும் நம்மை விட்டு நீங்காமல் கூடவே இருக்கிறான். நம்முடைய ஆணவமலப் பற்றினால் பல நேரங்களில் நாம் அவனை அறியாமல் இருக்கிறோம்.

கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க: கோகழி என்பது திருப்பெருந்துறை என்று பல ஆசிரியர்கள் உரை காண்கின்றனர். அருணை வடிவேலு முதலியார் அவர்களும் திருப்பெருந்துறை என்றே சொல்கிறார். சில ஆசிரியர்கள் கோகழி என்பது திருவாவடுதுறை என்று கூறுகின்றனர். ச.தண்டபாணி தேசிகர் திருவாவடுதுறை என்று குறிப்பிடுகிறார். குருநாதராக வந்து அருளி என்பதற்கு திருவாவடுதுறையிலே மணிவாசகர் கனவில் குருநாதராக வந்து காட்சி கொடுத்தார் என்றும் இந்தச் செய்தி திருவாவடுதுறை தல புராணத்தில் இருப்பதாகவும் குறிப்பிடுகிறார். குருமணி என்றால் குருநாதன் என்றும் குருநாதர்களில் மேம்பட்டவன், பரம ஆசிரியனாக இருக்கும் பெருமானே என்றும் அவனை குருமணி (குருநாதர்களில் மணி போன்று உயர்ந்து நிற்பவன்) என்றும் அருணையார் உரை விளக்கம் தருகிறார்.

மேலும் அருணையார் தமது உரையில் குருமணி என்பது சிறப்பு உவமை ஆகுபெயர் என்று இலக்கணம் காட்டுகிறார். **"சிறப்பே காதல நலனே வலி"** என்பது தொல்காப்பியம். இது சுவாமியை குறித்த சிறப்பு ஆகுபெயர். அதனால் "இறைவன் ஒருவனுக்கே உண்மையாயும் ஏனையவர்க்கு முகமனாயும் அமையும் எனக் கொள்க' எனக் கூறுகிறார்.

**ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க:**

ஆ-ஞானம்
க-மோட்சம்
ம-மல நாசம்

ஆகவே ஆகமம் என்பது ஞானத்தை நல்கி மல நாசம் செய்து மோட்சத்தை வழங்குவது என்னும் காரண குறியாய் நூல்களை உணர்த்திற்று என்பார் ச.தண்டபாணி தேசிகர்.

ஆ-பாசம்
க-பசு
ம-பதி

எனப் பொருள் தந்து பதி பசு பாசங்களாக முப்பொருள் இயல்பை உணர்த்துவது எனலுமாம். இவை காமிகம் முதலாய் வாதுளம் ஈறாய் இருபத்தெட்டாம். வேதம் பொது நூல் ஆதலின், அதன் கண்பாலில் நெய் போல விளங்காது நிற்கும் இறைவனது உண்மை இயல்பு சிறப்பு நூலாகிய ஆகமங்களில் தயிரில் நெய் போல இனிது விளங்கும் ஆதலின் "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்" என்று அருளிச் செய்தார் என்பது அருணியார் உரை. அண்ணித்தல் -இனித்தல்

**ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க:** இறைவன் -எல்லா பொருள்களிலும் தங்குபவன். இருத்தல்-தங்குதல், அடி என்றது ஏகனாக இருந்த நிலையில் அவன் அருளையும், அனேகனாகியும் இறைவனாகியும் இருந்த நிலையில் திருவருள் வடிவான சீபாதங்களையும் உணர்த்தும் என்க. இக்கருத்து முழுதும்

**"ஏகனுமாகி யனேகனுமானவன்**
**நாதனுமானான் என்று உந்தீபற**
**நம்மையே ஆண்டான் என்று உந்தீபற"**

என்னும் திருவந்தியாரினும் அறிவிக்க பெறுதல் காண்க.

திருவடி வாழ்த்தாக அமைந்த இந்த முதல் ஆறு அடிகளாலும் இறைவன் உலகிற்கு நிமித்த காரணன் ஆதலையும் உயிரையும் உடம்பையும் கலந்து நின்று இயக்குதலையும் அன்பர் அக த் தாமரை உள்ளிருக்கும் அவன், புறத்தேயும் குருவாக வந்து காட்சி வழங்குதலையும் நேர்க்காட்சியில் கண்ட சிவனை நூற்காட்சியிலும் கண்டு தெளிதலையும் சிவபரம்பொருள் ஒன்றாயும் பலவாயும் பரிபாக நிலைக்கு ஏற்ப அருளுதலையும் அடிகள் விளக்கி அருளியுள்ளார்கள்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## இலங்கையிற் சோழர் ஆட்சிக்காலத்தில் சைவக் கோயில்களும் பண்பாடும்





சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

**(கடந்த திங்கள் தொடர்ச்சி)**

### மாதோட்டம்

ஈழநாட்டின் புராதன நகரங்களில் குறிப்பாக வர்த்தக நகரமாக விளங்கியது மாதோட்டமாகும். இங்குள்ள துறைமுகத்தை மாந்தை என்று கூறுவர். திருஞானசம்பந்தரும், நம்பியாரூரரும் பாடிய திருக்கேதீச்சரப் பதிகங்களில் இம் மாதோட்ட நகரின் சிறப்பு பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தென்னாசியா, தென் கிழக்காசிய நாடுகளுக்கு இலகுவாக வர்த்தகம் செய்யும் துறைமுகமாக மாந்தை விளங்கியமையால் சோழர்களும் இந்நகரையும் இத்துறைமுகத்தையும் நன்கு உபயோகப்படுத்தினர். அதனால் மாதோட்டத்திற்கு இராசராசபுரம் என்னும் பெயரை இட்டனர். இந்நகரில் அமைந்துள்ள பெருந்தெருவொன்றுக்கும் இராசராசப்பெருந்தெரு என்றும் பெயரிட்டிருந்தனர். இந்நகரில் திருக்கேதீச்சரத்தைப் புதுப்பித்தும், பல புதிய சைவக் கோயில்களை எழுப்பியும் அவற்றுக்குத் தானங்களையும் வழங்கினார்கள். கோயில் விவகாரங்களில் வணிகர்களும் பல்வேறு சமூகத்தாரும் பங்கெடுத்துப் பணிபுரிந்தார்கள்.

சோழப் பெருவேந்தர்கள் மாதோட்டத்தில் அமைத்த கோயிலைச் இராசராசேச்சுரம் என்னும் பெயரை இட்டு அழைத்தனர். இதனைச் சோழ மண்டலத்துச் சத்திரிய சிகாமணி வளநாட்டு, வேளார் நாட்டுச் சிறுகூற்ற நல்லூர்க் கிழவன் தாழிகுமரன் என்பவனால் கட்டுவிக்கப்பட்டது. அது மட்டுமன்றி அவன் வைகாசி விசாகம் ஏழுநாளும் விழா எடுத்து தீர்த்தம் ஆட வேண்டும் என்றும் கோயிலின் நித்திய பூசை செய்யும் பிராமணர் இருவருக்கும் நாள் தோறும் கொடுக்கப்பட வேண்டிய நன்கொடைகள் பற்றியும் இக் கோயிலிலுள்ள சாசனம் தெரிவிக்கின்றது.

இராசேந்திர சோழனது ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டொன்றில் **"திருவிராமீசுவரம்"** என்னும் சைவக்கோயில் கட்டப்பட்டதாக அறியமுடிகின்றது. **"இராசேந்திர சோழனின் பெருந்தனத்துப் பணிமகனான சிறுகுளத்தூருடையான் தேவன் இக் கோயிலைக் கட்டி, அக்கோயிலுக்கு இறையிலித் தானமாகப் பலவற்றை ஏற்படுத்தியிருந்தான். அதாவது சந்தி விளக்கெரிப்பதற்கென நாலுகாசு மானியமாக வழங்கியிருந்தான். இந் நான்கு காசுக்களில் இரண்டு பொற்காசுகள் இங்கு வர்த்தகமும் செய்து சங்கர பாடியரிடமிருந்தும், மிகுதி வெற்றிலை வாணிபர், வாழைக் காய் வாணிபர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது".** (நன்றி : South Indian inscriptions (SII) VOL.IV)

### திருகோணமலை

இலங்கையின் கிழக்குப் பகுதியின் சிகரமாக அமைவது திருகோணமலை ஆகும். அதன் அருகாமையில் அமைந்துள்ள மற்றுமொரு முக்கிய பிரதேசம் கந்தளாய் ஆகும். இவை இரண்டும் சோழராட்சிக்குட்பட்ட இடங்களாகும். இங்கு சோழர் காலத்திற்குரிய தொல்பொருட்சின்னங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கி.பி 7ஆம் நூற்றாண்டில் தமிழாகரனான சம்பந்த பெருமானால் பாடல் பெற்ற ஈழத்து சிவாலயங்களில் மூத்தது திகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேச்சரம் ஆகும். இந்நகரம் சோழராட்சிக் காலத்தில் இராசேந்திர சோழ வள நாட்டில் ஒன்றாக விளங்கியது. இந்நகரத்தில் சோழரும், சோழ பிரதானிகளும் கோயில்களை அமைப்பதிலும் அவற்றை நிர்வகிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். ஈழநாட்டில் முதலாம் இராசேந்திர சோழனின் காலத்தில் சோழச்சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக விளங்கியவன் சோழ இலங்கேசுவரன். இவன் ஆட்சியாண்டுகளில் எழுதப்பெற்ற இரு சாசனங்கள் மானாங்கேணியில் கிடைத்துள்ளன. அச்சாசனம் 10ஆம், 11ஆம் நூற்றாண்டுகளில் புகழ்பெற்றிருந்த கோகர்ணத்துச் சிவாலயம் பற்றியது. அச்சிவாலயம் மச்சகேசுவரம் என்னும் பெயரால் வழங்கப்பட்ட செய்தியையும் அச்சாசனம் குறிப்பிடுகின்றது. இச்சாசனம் **"ஈழுமான மும்முடிச் சோழமண்டலத்து இராசேந்திர சோழ வளநாட்டுத் திருகோணமலை மச்சகேசுவரத்து கருவறையும், அதே வள நாட்டிலுள்ள வேறொரு சிவாலயமுந் தொடர்பாகச் சோழ மண்டலத்து இராசேந்திரசிங்க வளநாட்டுப் பிரதானிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்வதாக அமைகின்றது."** (நன்றி : இலங்கையில் இந்து சமயம்)

இலங்கையிற் சோழராட்சியில் திருகோணேச்சர மச்சகேசுவரத்திற்கு வழங்கப்பட்ட தேவதானங்களைப் பற்றி நிலாவெளிச் சாசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. **"மச்சகேஸ்வரத்துத் திரு நீலகண்ட மகாதேவர் சந்நிதியில் நித்திய நிவேதனத்துக்கு உரா கிரிகாம, கிரிகண்ட கிரிகாம என்னும் இடங்களிலுள்ள 250 வேலி நிலம் வழங்கப்பட்டது."** (நன்றி: இலங்கையில் இந்து சமயம்) என்ற செய்தியும், பன்மாகேசுவரர் என்னும் சிவனடியார்கள் திருத்தொண்டுகள் புரிந்த செய்தியையும் நிலாவெளிச் சாசனம் தெரிவிக்கின்றது.

முதலாம் இராசராசனின் மெய்க்கீர்த்தி அடங்கிய சாசனம் ஒன்று கோணேச்சர கோயிலின் கடலுக்கடியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அச்சாசனத்தின் பகுதி சிதைந்து இருப்பதனால் அம்மன்னன் அக்கோயிலுக்குச் செய்த திருப்பணி பற்றியதொன்றாக அமையக்கூடும் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். மேலும் இராசேந்திர சோழனது காலத்துச் சாசனம் ஒன்று திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோயிற் தூண் ஒன்றில் எழுதப்பட்டுள்ளது. அதில் அம்மன்னனின் மெய்கீர்த்தியின் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

சோழராட்சிக் காலத்தில் திருக்கோணேச்சரம் மேன்மை பெற்று விளங்கியுள்ளது. இதற்குச் சான்றாக சோழமன்னர் மூவர் காலத்

துக் கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன.

## கந்தளாய்

ஈழத்தின் இராசேந்திர சோழ வளநாட்டில் கந்தளாயும் முக்கிய பிரதேசமாக இருந்தது. அங்கு ஓர் பிரமதேயம் என்னும் சமய நிறுவனம் நிறுவப்பட்டிருந்தது. அது இராசராச சதுர்வேதி மங்கலம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இராசேந்திர சோழனின் மகனாகிய சோழ இலங்கேசுவரனும் கந்தளாயில் சிலகாலம் ஆட்சி புரிந்த காலத்தில் அங்குள்ள குளத்தின் வழியாக வாய்க்கால் இட்டு வயல்களுக்கு நீர்ப்பாசனஞ் செய்தான் என்று அவனைப் பற்றிக் குறிப்பிடும் சாசனம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழ இலங்கேசுவரன் காலத்துச் சாசனம் ஒன்றில் மகாசபை ஒன்று கூடி ஓர் திட்டம் நிறைவேற்றி அதை முத்தங்கைக் கோயிலில் பொறித்தார்கள் என்ற செய்தி வருகின்றது. இங்கு முத்தங்கை என்பது துர்க்கைக்குரிய கோயிலாகும். எனவே இச்சாசனப்படி சோழர் காலத்தில் கந்தளாயில் அமைக்கப்பட்ட அம்மன் கோயிலொன்றைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

கந்தளாய்ப் பிரமதேயத்தின் எல்லைக்குள் சிவாலயம் ஒன்று அமைந்திருந்தது. அது இராசராச ஈசுவரம் என்ற பெயரில் அழைக்கப்பட்டது. விசயபாகு ஆட்சியில் அது விசயராச ஈசுவரம் என்னும் பெயரால் வழங்கப்பட்டது என்பர்.

## கடவத்கோறளை - ஆதகட

வடமத்திய மாகாணத்தில் கடவத்கோறளையில் ஆதகட என்னும் ஊரில் இராசராச சோழனுக்கு முன்பு ஆட்சியிலிருந்த உத்தமசோழனின் பெயரில் உத்தமசோழீசுவரம் என்ற ஓர் ஆலயம் அமைந்திருந்தமை பற்றி இங்கு கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டினால் அறியமுடிகின்றது. இக்கோயிலை 11ஆம் நூற்றாண்டில் இலங்கையில் உள்ள தமிழ்ப்பிரதானிகள் அமைத்தார்கள் என்றும் அக்கோயிலுக்கு அரசன் இராமேசன் என்பவன் கொடுத்த தானங்கள் பற்றியும் அக்கல்வெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருணாகல் - மாகல்

குருணாகல் மாவட்டத்தில் உள்ள ஊர் மாகல் ஆகும். இது விக்கிரமசலாமேகபுரம் என்றும் அழைக்கப்பட்டது. அது ஆரம்ப காலங்களில் ஒரு வணிகநகரமாக உருவெடுத்திருந்தது. பொலநறுவையிலிருந்த ஐந்நூற்றுவரும் இங்கு வர்த்தக நிலையங்களை அமைத்திருந்தனர். வணிகருக்குப் பணிபுரிய வீரக்கொடி, கம்மாளர், வண்ணார் போன்ற சமூகப்பிரிவினரும் இங்கு வாழ்ந்தார்கள். இவர்களின் வழிபாட்டுத் தேவைகளுக்கென்று விக்கிரம சலாமேக ஈசுவரம் என்னுஞ் சிவன் கோயிலும், வீரமாகாளம் என்னும் அம்மன் கோயிலும் அமைக்கப்பட்டது. இக்கோயிலைப் பற்றியும் சாசனக் குறிப்புகளுள்ளது.

மாகல் சோழரின் படைத்தளம் அமைந்த இடம் ஆகையால் அங்கு ஈசுவரன் கோயில் ஒன்று அமைந்திருந்தது. அத் தலத்திற்கு சோழ வேந்தனான முதலாம் குலோத்துங்க சோழனின் மகளும் பாண்டிய அரசனான வீரப்பெருமாளின் மனைவியுமாகிய சுந்த மல்லியாழ்வார் 1118 இல் ஒரு நந்தாவிளக்கும் மூன்று சாண் நீளத்தில் தாராநிலை விளக்கொன்றும் அவற்றை எரிப்பதற்குப் பத்துக் காசினையுந் தானமாக வழங்கினாள் என்று அங்குள்ள சாசனம் தெரிவிக்கின்றது.

## இலங்கையில் பிற்கால சோழர் கலைப்பாணிக் கோயில்கள்

இலங்கையில் சோழராட்சிக்காலம் நிறைவுற்றதும், ஈழத்தின் வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் அமைந்த திருக்கோயில்களில் சோழர் கால கட்டடக்கலையின் பிரதிபலிப்புக்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளன.

பிற்காலச் சோழர் ஆட்சியில் குறிப்பாக, முதலாம் குலோத்துங்கன் ஆட்சியில் அவனது சேனாதிபதியான கருணாகரத் தொண்டமான் ஈழத்தின் வடபகுதியைக் கைப்பற்றிய போது உரும்பிராயில் பிள்ளையார் கோயிலை சோழர் பாணியில் கட்டினான். யாழ்ப்பாணத்தில் பூநகரியில் அமைந்துள்ள சிதைவடைந்த நிலையிலுள்ள மண்ணித்தலைச் சிவாலயம் சோழர் கலைப் பாணியில் அமைந்தவை. இதே போல் கிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ள வெருகல், மண்டூர், போரதீவு போன்ற ஊர்களில் அமைந்துள்ள கந்தசுவாமி கோயில்களும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரம், நிந்தவூரின் அழிவடைந்துள்ள சிவாலயம் என்பனவும் பிற்காலச் சோழர் கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

சோழராட்சியின் போது பௌத்த தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் கட்டப்பட்ட பௌத்த வழிபாட்டுத் தலங்களும் சோழர்கலைப் பாணியில் அமைக்கப்பட்டன. திருகோணமலை கட்டுக்குளப் பற்றில் பெரிய குளத்தில் அமைந்துள்ள பள்ளி இராசராசன் பெயரால் இராசராசன் பெரும்பள்ளியென்று அழைக்கப்பட்டது. இது சோழர் கலைப்பாணியைத் தழுவியவை. இதேபோல் பொலநறுவையில் அமைந்துள்ள பௌத்த வழிபாட்டுத் தலங்களிலும் சோழர் கலைப்பாணியின் செல்வாக்கினைத் தரிசிக்க முடியும்.

## முடிவுரை

இலங்கையில் சோழரின் ஆட்சி கி.பி 1070 இல் நிறைவுபெற்றது. சிங்கள இளவரசனான முதலாம் விஜயபாகு தென்னிந்தியப் படைகளை வெற்றி கொண்டு இலங்கையின் அரசியலில் சுதந்திரத்தை ஈட்டிக்கொடுத்தான். இருந்த போதிலும் இலங்கையின் சைவ சமயப்பண்பாட்டுத் தலங்களிலும், பௌத்த சமய பண்பாட்டு மரபுகளிலும் சோழர்களினால் ஏற்படுத்திய சமயஎழுச்சி, சமயப்பொறை, சைவக் கோயில்களின் அமைப்பு, அவர்களின் கலைப்பாணி, படிமக்கலை வளர்ச்சி, கோயில் நிர்வாக பரிபாலனம் முதலான அம்சங்கள் மிகுந்த செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தன. இன்றும், அன்று சோழர் ஏற்படுத்திய தென்னிந்திய சமயம் மற்றும் கலைச் செல்வாக்குகள் தமிழ் மற்றும் சிங்கள மக்களிடையேயும் கலப்புற்று இன்றைய கோயில் மற்றும் பள்ளி வழிபாடுகளிலும் கலையம்சங்களிலும் ஊடுருவியிருப்பதனை மதிப்பீடு செய்து கொள்ள முடிகின்றது

## உசாத்துணை நூல்கள்


1. **பத்மநாதன் சி., இலங்கையில் இந்துசமயம், அகில இலங்கை இந்துமாமன்றம்., கொழும்பு 2005.**
2. **சதாசிவ பண்டாரத்தார்.தி.வை., பிற்காலச்சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1974.**
3. **பத்மநாதன் சி., பொலநறுவைக் காலத்து இலங்கை வெண்கலப் படிமங்கள் சிறப்புமலர் இரண்டாவது உலக இந்து மகாநாடு.**
4. **இந்திரபாலா.கா., இலங்கையில் திராவிடக் கட்டடக்கலை, கொழும்பு, 1970.**
5. **நீலகண்ட சாஸ்திரி.கே.ஏ., சோழர்கள் 1,2 நியூ செஞ்சரி புக்ஹவுஸ், பிரைவேட் லிமிடெட், சென்னை.**
6. **தனபாக்கியம்.ஜி., இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும், சென்-ஜோசப் கத்தோலிக்க அச்சகம். மட்டக்களப்பு, 1988.**
7. **H.C.P.Ball., Archaeological Survey of Ceylon Annual report, Colombo, 1906**
8. **South Indian Inscriptions (SII) Vol – IV. A.Velupillai, Ceylon. 1970.**
9. **S. Paranavitana., Art and Architecture of Ceylon; Plonnarwa period. Colombo – 1964.**


**(முற்றும்)**

**திருச்சிற்றம்பலம்**

**படங்கள் - பிரவீன் நகுலேஸ்வரன்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்



**“சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்**
**வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்”**

### திருவாரூர் குளத்திலிருந்து எடுத்த பன்னீராயிரம் பொன்

*சுந்தரரும் பரவையாரும் திருவாரூரில் திருவருளால் மகிழ்ந்திருக்கும் நாட்களில், வன்தொண்டர் பரவையாரிடம் ‘முதுகுன்றப் பெருமான் முன்னர் நமக்கருளிய நிதியங்களை மணிமுத்தாற்றிலிட்டேன், அதனை நம் துணைவராகிய திருவாரூர் இறைவரின் கமலாலயக் குளத்திலிருந்து, அப்பெருமானின் அருளால் எடுத்து வருதற்கு உடன் வருவாய்’ என்றுரைக்கின்றார்.*

**நாயனார் முதுகுன்றர் நமக்களித்த நன்னிதியம்**
**தூயமணி முத்தாற்றில் புகவிட்டேம் துணைவர்அவர்**
**கோயிலின் மாளிகை மேல்பால் குளத்தில் அவர்அருளாலே**
**போய்எடுத்துக் கொடுபோதப் போதுவாய் எனப்புகல**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 127)**

*பரவையார் புன்முறுவலுடன்* **‘இது என்ன அதிசயம்’** *என்று வியப்புற,* **‘பரவையே! நம் பெருமானின் அருளால் அப் பொன்னினை எடுத்துனக்குத் தருவது ஒருக்காலும் பொய்க் காது’** *என்று உறுதி கூறிப் பூங்கோயில் மேவும் புராதனரை வணங்கிப் போற்றி, ஆலயத்தினை வலமாய் வந்து மேற்குப் புறத்திலுள்ள திருக்குளத்தினை அடைகின்றார். பரவையாரைப் படித்துறையிலேயே இருத்திக் குளத்தினுள் இறங்கி, அப்பொழுது இட்டாற் போன்று பொற்குவியல்களைத் தேடத் துவங்குகின்றார்.*

*சுந்தரரின் திருப்பாடலைக் கேட்கும் திருவுள்ளத்தால் இறைவர் பொன்னினைத் தந்தருளாமல் திருவிளையாடல் புரிகின்றார். அது கண்டு பரவையாரும் விளையாட்டாய்ச் சிறிது பரிகசிக்கும் தொனியில் ‘ஆற்றிலிட்டுக் குளத்தில் தேடும் எம் தலைவரே, இறைவர் தமக்கருளும்* **தன்மையும் இதுவோ?’ என்று புகலத் தம்பிரான் தோழரும் ‘பொன்போலும் திருமேனியுடைய பரம்பொருளே, புலித்தோல் அணிந்தருளும்**




**புண்ணியனே, முப்புரமெரித்தருளும் முதுகுன்ற முதல்வனே, இப்பரவையிடத்துத் தோன்றும் பரிகாசப் புன்னகை மாறுமாறுத் தாம் முன்னர் அறிவித்த வண்ணம் இவ்விடத்தில் பொற்குவியல்களை வருவித்துத் தந்தருள வேண்டும்'** என்று உளமுருகப் பாடுகின்றார்,

**பொன்செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கசைத்தீர்**
**முன்செய்த மூஎயிலும் எரித்தீர் முதுகுன்றமர்ந்தீர்**
**மின்செய்த நுண்ணிடையாள் பரவைஇவள் தன்முகப்பே**
**என்செய்தவாறு அடிகேள் அடியேன் இட்டளம் கெடவே!**
**- (சுந்தரர் தேவாரம் - திருமுதுகுன்றம்)**

ஒரு சுவையான குறிப்பு, சுந்தரனார் நின்று பாடும் இடமோ தியாகேச மூர்த்தியின் இடமான திருக்குளத்தில் எனினும் போற்றிப் பாடுவதோ முதுகுன்றப் பரம்பொருளின் அருளினை வேண்டி, அளித்தவரிடமே முறையிட்டுப் பெறுவதன்றோ முறை! 8ஆம் திருப்பாடல் நிறைவுறும் வரையிலும் இறைவர் அருளாதிருக்க, அற்புதத் தன்மை வாய்ந்த 9ஆம் திருப்பாடலில் முதுகுன்ற இறைவரை ஆடல் வல்லானின் திருநாமத்தால் **'கூத்தா தந்தருளாய்'** என்று விண்ணப்பித்துப் போற்றுகின்றார்,

**ஏத்தாது இருந்தறியேன் இமையோர்தனி நாயகனே**
**மூத்தாய் உலகுக்கெல்லாம் முதுகுன்றம் அமர்ந்தவனே**
**பூத்தாரும் குழலாள் பரவையிவள் தன்முகப்பே**
**கூத்தா தந்தருளாய் கொடியேன் இட்டளம் கெடவே.**
**- (சுந்தரர் தேவாரம்: திருமுதுகுன்றம் - திருப்பாடல் 9)**

இறையனார் திருவுள்ளம் மிக மகிழ்ந்துப் பொன்னினைத் தருவித்தருள, முன்னர் முதுகுன்றப் பெருமானிடம் வேண்டியிருந்தது போலவே, திருவாரூர் வாழ் அன்பர்கள் யாவரும் **'இதென்ன அதிசயம், இத்தன்மையில் அருளைப் பெற்றோரும் உளரோ?'** என்று திருவருட் திறத்தினை வியந்து போற்றப் பெருநிதியங்களைக் கரையில் கொணர்ந்து சேர்க்கின்றார் தம்பிரான் தோழர்.

### திருநீடூர் அருட்காட்சி

சுந்தரர், திருவலம்புரம் திருச்சாய்க்காடு திருவெண்காடு திருநனிபள்ளி திருநின்றியூர் முதலிய திருத்தலங்களை வழிபட்டுப் பரவியவாறே திருநீடூரின் எல்லை வழியே பயணித்துச் செல்கின்றார். அப்பதியினுள் புகாமல் மேலும் முன்னறிச் செல்லும் நிலையில், திருவருளால் தமக்குக் கூடியிருந்த ஒப்புவமையிலா மெய்யுணர்வினால் நீடூர் தலத்தினைத் தாமாக நினைக்கப் பெறுகின்றார். மீளவும் திரும்பிச் சென்று 'நீடூர்ப் பரமனைப் பணியா விடலாமே' எனும் திருப்பதிகத்தினைப் பாடியவாறே அங்குள்ள சிவாலயம் நோக்கிச் செல்கின்றார்.

**அப்பதியில் அன்பருடன் அமர்ந்தகல்வார் அகலிடத்தில்**
**செப்பரிய புகழ்நீடூர் பணியாது செல்பொழுதில்**
**ஒப்பரிய உணர்வினால் நினைந்தருளித் தொழலுறுவார்**
**மெய்ப்பொருள் வண்தமிழ்மாலை விளம்பியே மீண்டணைந்தார்**
**- (ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - திருப்பாடல் 151)**

ஆலயத்துள் புகுந்து நீடூர் மேவும் நின்மலனின் திருச்சன்னிதியினை அடைந்து, திருமுன்னர் வீழ்ந்தெழுந்து, உடலெங்கும் புளகமுற, உச்சி கூப்பிய கையினராய்க் கண்ணருவி பாய நெகிழ்ந்து தொழுகின்றார். இப்பெருநிலையில் மீதமுள்ள திருப்பதிகப் பாடல்களையும் பாடி நிறைவு செய்து போற்றுகின்றார்.

**மடலாரும் புனல்நீடூர் மருவினர்தாள் வணங்காது**
**விடலாமே எனும் காதல் விருப்புறும் அத்திருப்பதிகம்**
**அடலார் சூலப்படையார் தமைப்பாடி அடிவணங்கி**
**உடலாரும் மயிர்ப்புளகம் மிகப் பணிந்தங்குறைகின்றார்**
**- (ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - திருப்பாடல் 152)**

**ஊர்வதோர்விடை ஒன்றுடையானை ஒண்ணுதல்தனிக் கண்ணுதலானைக்**
**காரதார் கறை மிடற்றானைக் கருதலார் புரம் மூன்றெரித்தானை**
**நீரில் வாளை வரால் குதி கொள்ளும் நிறைபுனல் கழனிச் செல்வ நீடூர்ப்**
**பாருளார் பரவித்தொழ நின்ற பரமனைப் பணியா விடலாமே**
**- (சுந்தரர் தேவாரம் - திருநீடூர்)**

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்**

# எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன் அரிவாட்டாய நாயனார்




**வள்ளற் பிராற்கமு தேந்தி**
**வருவோ னுகலுமிங்கே**
**வெள்ளச் சடையா யமுதுசெய்**
**யாவிடில் லென்தலையைத்**
**தள்ளத் தகுமென்று வாட்பூட்**
**டியதடங் கையினன்காண்**
**அள்ளற் பழனக் கணமங்**
**கலத்தரி வாட்டாயனே**

**- (திருத்தொண்டத் திருவந்தாதி 11:33:15)**



செல்வி.
நவிசா ஈஸ்வரானந்தம்
கலைமாணி

என திருத்தொண்டர் திருவந்தாதியில் போற்றப்பட்ட வரும் எத்தகைய துன்பங்கள் வந்த போதும் தனது சிவத் தொண்டிலும், பத்தியிலும் எத்தகைய மாறுபாடும் காட்டாது, பத்தியே பரமானந்தம் என்று, ஒரே நிலை யில் உறுதிபட வாழ வேண்டும் என்ற உண்மையை இந்த உலகிற்கு எடுத்துரைத்தவரும் தண்டலை நீள்நெறிநாதர் கோயிலில் சிலையாக எழுந்தருளி இருப்பவருமாகிய தாயனார் சோழநாட்டில் கணமங்கலம் என்னும் ஊரில் பிறந்தவர்.

இவரும் இவர் மனைவியும் சிவபெருமானிடம் மாறாத அன்பு கொண்டிருந்தனர். பெரும் செல்வந்த ராக இருந்த தாயனார், நாள் தோறும் சிவபெருமானுக்கு செந்நெல் அரிசியில் (சம்பா அரிசி) திருஅமுது செய்து செங்கீரை சமைத்து, மாவடு சேர்த்து எடுத் துக்கொண்டு கணமங்கலம் அருகில் இருந்த திருதண்டலை (தண் டலைச்சேரி) ஊரிலிருக்கும், நீள்நெறிநாதர் (திரிபுத்தீசுவரர்) கோயிலில் உள்ள எம்பெருமான் சிவனுக்கு படைத்து வழிபட்டு வந்தார், இறைவன் உணவை எடுத்துக் கொண் டதற்கு சான்றாக தாயனாருக்கு ‘விடேல்’ என்ற சத்தம் ஒன்று கேட்கும். சத்தத்தை கேட்ட பின்பு சிவனடியார் களுக்கு உணவு அளித்த பின், தானும் உணவருந்தி அன்றைய காரியத்தை தொடங்குவார். தாயனார் அவர்கள் கோயி லுக்குச் செய்து வந்த திருப்பணிகள் பலவற்றுள், இதை ஒரு முக்கியத் திருப்பணியாகக் கொண்டிருந்தார்.

சிவபெருமான், தன் மீது அன்பு கொண்ட தாயனாரின் பத்தியை உலகிற்கு எடுத்துக் காட்ட திருவிளையாடல்

புரிய திருவுளங் கொண்டார். சிவபெருமானின் திருவிளையாடல் படி, தாயனாரின் செல்வ வளங்கள் சிறிது சிறிதாய் குறைந்து அவரை வறுமை வாட்டியது. வறுமை தன்னை ஆட்கொண்டபோதும், சிவபெருமானுக்கு செய்யும் திருத்தொண்டை நிறுத்தவே இல்லை. செல்வந்தராக இருந்த தாயனார், கூலிக்கு வேலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டார். வறுமையின் பிடியில் இருந்த தாயனார் கூலி நெல் அறுத்து, அதன் வாயிலாக செந்நெல்லையும், கார்நெல்லையும் பெற்று வந்தார். கூலியாகப் பெற்ற செந்நெல்லைக் கொண்டு சிவபெருமானுக்கு திருஅமுது படைத்து அகமகிழ்வார். மீதமுள்ள கார்நெல்லை தனக்குமாகப் பயன்படுத்தி வந்தார்.

தனக்கு கிடைக்கும் நெல்மணிகளில் செந்நெல்லை சிவனுக்கும், கார்நெல்லை தனக்குமாய் ஒதுக்கி வந்ததை அறிந்த சிவபெருமான், ஒரு கட்டத்தில் கூலியாக கிடைக்கும் நெல் அனைத்தும் செந்நெல்லாக மாற்றினார். தாயனார், தம் சாப்பாட்டிற்கு கார்நெல் இல்லையேன்னு கவலைபடாமல், எம்பெருமானுக்கு நிறைய செந்நெல்லாகவே கிடைத்தற்காக மகிழ்ச்சியுற்றார். அனைத்து செந்நெல்லையும் அமுதாக்கி, படைத்து வந்தார். தன் வீட்டின் கொல்லை புறத்தில் இருந்த கீரைகளை சமைத்து கணவனும் மனைவியும் உண்டு வந்தனர். சில நாளில் கீரையும் கிடைக்காமல், தண்ணீரை மட்டுமே அருந்தி இறைதொண்டை தொடர்ந்து வந்தார். தாயனாரும், அவரது மனைவியும் பல நாள் பட்டினி கிடந்தாலும், கூலியாக வரும் செந்நெல்லைச் சிவபெருமானுக்கே அமுதாக்கி படையல் செய்து பின், அடியார்களுக்கு கொடுத்து வந்தனர்.

ஒரு நாள் வழக்கம்போல் தாயனார் படைப்பதற்காக கூடையில் செந்நெல் திருவமுது, செங்கீரை, மாவடு போன்றவற்றை சுமந்து கொண்டு மனைவியுடன் நீள்நெறி நாதர் கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். பல நாட்களாக பட்டினி என்ற நிலையால் அவரது கால்கள் மேற்கொண்டு நடக்க முடியாமல் தள்ளாடின. தாயனாரின் பின்னால் வந்த அவரது மனைவி தன் கணவன் கீழே விழுந்து விடாமல் இருக்க, தனது கையால் கழுத்தை தாங்கிப் பிடித்தும் சரிந்து விழுந்தார். இதனால் அவர் தலையில் சுமந்திருந்த கூடை விழுந்து செந்நெல் அரிசி திருஅமுது, செங்கீரை, மாவடு போன்றவை மண்ணில் சிதறியது. இதைத் தன் தவறாகவே நினைத்து வருந்திய தாயனார், சிவனுக்கு கொண்டு வந்த பிரசாதங்கள் கீழே விழுந்ததில் பதறினார்.

**“இன்று எப்படி உங்களுக்கு அமுது படைப்பேன், தங்களை பட்டினியாக்கி விட்டேனே. இனி நான் எப்படி உயிர் வாழ்வேன். வாழ்ந்து என் செய்வேன்”** என்று தன் இடையில் சொருகி வைத்திருந்த அரிவாளை எடுத்து, கழுத்தை அறுக்க முயன்றார். அப்போது நிலவெடிப்பில் இருந்து வெளிப்பட்ட ஒரு கை தாயனாரை தடுத்து நிறுத்தியது. மேலும் நாள்தோறும் சிவபெருமானுக்கு தாயனார் அமுது செய்வித்தல் செய்யும் போது கேட்கும் **“விடேல் விடேல்”** என்னும் ஓசையும் எழுந்தது.

சிவபெருமானின் திருக்கரம் தாயனாரின் கரத்தைப் பற்றியவுடன், கழுத்தை அறுக்க முயன்றதால் உண்டாகிய காயமும் பிற வினைகளும் அகன்றன. நடந்தவைகளைக் கண்ட தாயனாரும், அவருடைய மனைவியும் இறைவனின் கருணையை எண்ணி வியந்தனர். அப்போது இடப வாகனத்தின் மீது அம்மையப்பர் காட்சியளித்து, **“உன்னுடைய அன்பினைக் கண்டு வியந்தோம் நீயும் உன் மனைவியுடன் கயிலையில் எம்மோடு வாழ்வாயாக!”** என்று அருள் செய்து மறைந்தார்.

இறைவன் இவ்விடத்தில் அமுது செய்யும் பேற்றினை நான் பெறவில்லையே என்றெண்ணி அரிவாளால் தன்னுடைய கழுத்தை அறுக்க முயன்றதால் தாயனார், அரிவாள் தாய நாயனார் என்ற அழைக்கப்பட்டார். நாளடைவில் அதுவே அரிவாட்டாய நாயனார் என்றானது.

**பரிவுறு சிந்தை யன்பர்**
**பரம்பொரு ளாகி யுள்ள**
**பெரியவ ரமுது செய்யப்**
**பெற்றிலே னென்று மாவின்**
**வரிவடு விடேலெ னாமுன்**
**வன்கழுத் தரிவாள் பூட்டி**
**அரிதலால் அரிவாட் டாயர்**
**ஆயினார் தூய நாமம்**
**- (திருத்தொண்டர்புராணம் 12:19:22)**

எனத் திருத்தொண்டர் புராணத்தில் மிக அழகாக எடுத்தியம்பியுள்ளார். கடவுளுக்கு செய்யும் தொண்டுகளுக்கு அலட்சிய மனப்பாங்குடைய இன்றைய இளந்தலைமுறையினரின் இவருடைய வரலாற்றின் மூலம் தெரிந்து கொள்ள வேண்டியது எதை கொடுத்தாலும் அன்பு மனதுடன் கொடுக்க வேண்டும் என்பதை தனது வாக்காலும், வாழ்வாலும் வாழ்ந்து காட்டிய அரிவாட்டாய நாயனார் தைத் திங்கள் திருவாதிரை நட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தார்.

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு குந்தள நாயகி உடனுறை குந்தளேசுவரர் - திருக்குரக்குக்கா

## தேவாரப் பாடல்பெற்ற 276 சிவபுரங்களில் 28 ஆவது திருக்கோயில் திருக்குரக்குக்கா



**"குரக்கி னங்குதி கொள்ளுங் குரக்குக்கா
வரத்த னைப்பெற வானுல காள்வரே"**

**வழிபட்டோர்: அப்பர், சேக்கிழார், அநுமன் முதலியோர்.**
**பாமாலை: அப்பர், சேக்கிழார்.**

அநுமார் பூசித்த தலமாதலால் திருக்குரக்குக்கா எனப் பெயர் பெற்ற அற்புதத் தலமே அருள்மிகு குந்தள நாயகி உடனுறை குந்தளேசுவரர் உறையும் திருக்குரக்குக்கா திருத்தலம்.

**அமைவிடம்: நாகப்பட்டினம், தமிழ்நாடு.**

தஞ்சை மாவட்டத்தில் தலைஞாயிறு என்று வழங்கப்பெறும் திருக்கருப்பறியலூருக்கு வடக்கே சுமார் 1.5 கி.மீ. தொலைவில் உள்ளது.

**இறைவர் திருப்பெயர்: குந்தளேசுவரர்**
**இறைவியார் திருப்பெயர்: குந்தளாம்பிகை, குந்தள நாயகி.**
**கோயில் மரம்: வில்வமரம்**
**தீர்த்தம்: அனுமத தீர்த்தம், கணபதிநதி.**



**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**
**அப்பர் அருளிய திருப்பதிகம்**

**மரக்கொக் காமென வாய்விட் டலறிநீர்
சரக்குக் காவித் திரிந்தய ராதுகால்
பரக்குங் காவிரி நீரலைக் குங்கரைக்
குரக்குக் காவடை யக்கெடுங் குற்றமே - (05.75.01)**

**திருத்தலச் சிறப்பு**

அநுமார் பூசித்த தலமாதலால் இத்தலம் திருக்குரக்குக்கா எனப் பெயர் பெற்றது. மக்கள் வழக்கில் **"திருக்குரக்காவல்"** என்றும் அழைக்கப்படுகிறது.

குந்தளேசுவரர் சுயம்பு மணலிங்கமாக அருள்பாலிக்கிறார். சுவாமி, அம்பாள் விமானங்கள் ஏகதள உருண்டையமைப்பில் உள்ளன. வாயில் முகப்பில் அநுமார் பூசிப் போல் வண்ண ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. அனுமார் சன்னதி, சிவன் சன்னதி எதிரே அமைந்துள்ளது. இத்தலத்தில் சிவஆஞ்சநேயர் என்றும் அழைக்கப்படுகிறார்.

குரங்கு வழிபட்டதால் திருக்குரக்குக்கா எனப் பெயர் பெற்ற இத்தலத்தில் சித்திரையில் இரண்டு குரங்குகள் வந்து, சிவலிங்கம் மீது வில்வ இலை தூவி வழிபடுவது இறை அற்புதமே.



திருநாவுக்கரசர் அருளிய இத்தலத்திற்கான பதிகம் 5-ம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. அவர் பாடலில், இத்தல இறைவனைப் போற்றுபவர்களுக்கு துயரம், இடர் இல்லை வினை நாசமாகும் பாவம் இல்லாது வானுலகை ஆள்வார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இங்கு வழிபடும் அனைவருக்கும் வினைநாசமும், நிம்மதியும், நல்வாழ்வும் கிடைக்கும் என்பது சைவ நம்பிக்கை.

## திருத்தல வரலாறு

சேதுக்கரையில் (இராமேசுவரம்) சிவபூசை செய்ய எண்ணிய இராமர், அங்கு இலிங்கம் கொண்டுவரும்படி அனுமாரை அனுப்பினார். அநுமார் இலிங்கம் எடுத்து வரச் சென்ற போது தாமதமானதால், சீதாதேவி கடல் மணலில் இலிங்கம் அமைக்கவே, இராமர் அந்த இலிங்கம் மீது பூசை செய்தார்.

இதன்பின் இலிங்கம் உடன் வந்த அனுமார், இராமர் பூசை செய்ததை அறிந்து கோபம் கொண்டு, தனது வாலால் மணல் இலிங்கம் உடைக்க முயன்றும் முடியவில்லை. சிவ பாவம் செய்ததால் மன்னிப்பு வேண்டிய அவர், இதன் பின்னர் இத்தலத்தில் சிவபூசை செய்தார்.

அந்த நேரத்தில், சிவனுக்கு மலருடன், அநுமார் தனது காதில் அணிந்திருந்த குண்டலத்தை படைத்து வணங்கி மன அமைதி பெற்றார். அநுமார் குண்டலம் வைத்து வழிபட்டவர் என்பதால், இத்தலத்தில் சிவன் குண்டலகேசுவரர் என்ற பெயரால் பிரசித்தி பெற்றார்.

இவ்வாறு, அனுமன் வழிபட்டதும், சிவபூசை நடந்ததும், தலத்திற்கு புகழும், அதிசயமும் வழங்கிய வரலாறு இத்தலத்தில் நிலைத்திருக்கிறது.

## திருக்கோயில் அமைப்பு

இத்தலத்தில் இராசகோபுரமில்லை. ஒரு முகப்பு வாயில் மட்டுமே உள்ளது. முகப்பு வாயிலைக் கடந்து சென்றால் பலிபீடம் நந்தி உள்ளன. கொடிமரம் இல்லை. வெளி வீதியில் விநாயகர், வள்ளி, தெய்வயானை உடனுறை ஆறுமுகர் சந்நிதிகள் உள்ளன. முன் மண்டபத்தில் வலதுபுறம் பைரவர், சூரியன், அநுமார் திருமுன்கள் உள்ளன. வாயிலின் முகப்பில் அநுமார் சுவாமியைப் பூசிப்பது போல் வண்ண ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. முன் மண்டபம் வழியாக உள்ளே சென்றால் நேரே சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும் வலது புறம் தெற்கு நோக்கிய அம்பாள் சந்நிதியும் உள்ளன.

சிவன் சன்னதி கருவறை வாயிலில் அநுமார் கைகூப்பி நிற்கும் மூர்த்தம் உள்ளது. அனுமாருக்கு தனி சந்நிதியும் இவ்வாலயத்தில் உள்ளது. இக்கோயிலை அனுமார் தான் உருவாக்கி சிவனை பூசித்தார் என்று தலபுராணம் கூறுகிறது. இராமேசுவரத்தில் சீதை செய்த மணல் இலிங்கத்தை தன் வாலினால் கட்டி அகற்ற முற்பட்ட போது அனுமனின் வால் அறுந்து போயிற்று. சிவ பாவம் நீங்க இராமர் அறிவுரைப்படி அநுமார் இத்தலத்திற்கு வந்து ஒரு இலிங்கத்தை நிறுவி இறைவனை பூசித்தார். இத்தலத்தின் பிரசித்தி பெற்ற மூர்த்தி இந்த அனுமானே. ஒவ்வொரு அமாவாசையன்றும்



இவரது சன்னதியில் வேள்வி நடக்கிறது.

மேலும் இங்கு அப்பர் மூலத் திருமேனியும் அழகாகவுள்ளது சுவாமி, அம்பாள் விமானங்கள் ஏகதள உருண்டை அமைப்பில் உள்ளன.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்

# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

நகரச்சிறப்பு பாடல் -15

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கு மாகி யிருந்தவர் பூசனைக்கு
அங்கன் வேண்டு நிபந்தமா ராய்ந்துளான்
துங்க வாகமஞ் சொன்ன முறைமையால்

**பொருள் :** இவ்வரசன் மனுநீதிச் சோழர் மென்மேலும் வளர்கின்ற மறை வடிவினதாகிய புற்றினை இடமாகக் கொண்டவரும், எங்கேயும் ஆகி வீற்றிருப்பவரும் ஆகிய வன்மீக நாதருடைய பூசனைக்கு வேண்டிய படித் தரங்களை சிவாகமங்களில் விதித்தவாறு ஆராய்ந்து நியமித்தனன்.

**வி-உரை : பொங்கு மாமறைப் புற்று:-** இறைவனுக்கு இருப்பிடமாகித் தனக்குள் அவனைத் தங்க வைத்துக் காட்டிக்கொண்டிருத்தலால், புற்று மறை வடிவை



சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்



பவானி சிவ
அ.வேலுச்சாமி

யுடையது. மறை இறைவனுக்கு இடமாகும். அதுபோலவே இப்புற்றும் அவருக்கு இடமாயிற்று.

**எங்கும் ஆகி இருந்தவர்:-** புற்றை இடம் கொண்டவராயினும் எங்கும் ஆகி நிறைந்து இருந்தாராயினும் அன்பர்கள் மீது வைத்த கருணையினால் அவர்கள் தம்மை வழிபடும் பொருட்டு வெளிப்படக் காணப் புற்றிலே இடம் கொண்டு இருப்பவர் எனவும் இரு வழியும் பொருள் உரைத்துக் கொள்ளத்தக்கது. இதனால் இறைவனது எங்கும் நிறைந்திருக்கும் தன்மை என்ற இலக்கணம் குறிக்கப் பெற்றது.

**இருந்தவர்:-** "சிவ" சத்தத்திற்கு இருத்தல் - கிடத்தல் என்ற பொருள் கொண்டு, எங்கும் இருப்பவர் - எல்லாவற்றிலும் பதிந்து கிடப்பவர் - ஆதலின் சிவபெருமானுக்கு பெயராயிற்று என்பர். இப்பொருள் பற்றியே அப்பர் சுவாமிகள் "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி" என்ற நின்ற திருத்தாண்டகத்தில் அருளிச் செய்தார்.

நீற்றல் - இருத்தல், நீதி மன்னர் - நீதி மன்னர் கடைப் பிடித்துக் காக்க வேண்டிய சிறந்த ஒழுக்கம் சிவாலய பூசை காத்தலாகிய இஃதே என்பார். விண்ணவர் வேள்விகளை இயற்றியும், புற்றிடங் கொண்டார் பூசனைக்கு நிபந்தம் ஆராய்ந்து வைத்தும், உள்ள அரசர், அதன் துணை கொண்டு உலக நீதி செலுத்தினான் என்பது.

முன்னர் வேள்விகள் எவ்வாறு தனக்கென ஒரு எண்ணமில்லாது இயற்றினானோ அதுபோலவே பூசனைக்கு நிபந்தமும் வைத்தான் என்க. இவை திருக்கோயில்களில் செய்யும் பதார்த்த ஓசை. இவற்றால் வரும் புண்ணியம் அரசர்க்கும் உண்டாயினும் இவை பிறர் பொருட்டுச் செய்வனவாம்.

அவற்றுக்கு வேண்டிய நிபந்தனைகளை அரசர் அந்நாட்களில் அமைத்து வைத்தது தன் கீழ் வாழும் குடிகள் இனிது வாழும் பொருட்டே.

"ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வழி குன்றுவர்

**கூற்றுதைத் தான் திருக் கோயில்களானவை**
**சாற்றிய பூசைகள் தப்பிடிற் றானே"**

**"முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டிபின்**
**மன்னருக்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்**
**கன்னங் களவு மிகுந்திடுங் காசினி**
**என்னரு நந்தி எடுத்துரைத்தானே (திருமந்திரம்**
**- 2ம் தந்திரம்)**

என்ற திருமந்திரப் பிரமாணத்தால் இதன் உண்மை அறியலாம்.

**துங்க ஆகமம் சொன்ன முறைமையாவது:-** நித்தம், நைமித்தியம், காமியம் என்ற மூவகை, காரணம் பற்றாது என்றும் செய்வது நித்தம், நித்திய பூசை முதலியன ஒரு நிமித்தம் பற்றி செய்வன நைமித்தியம். இவை திருவிழா முதலியன. ஒரு குறிக்கோள், உட்கிடை, பெறும்படிச் செய்வன காவியமாம்.

**பாடல் 17**

**அறம் பொருளின்ப மான அறநெறி வழாமற் புல்லி**
**மறங்கடிந் தரசர் போற்ற வையகங் காக்கு நாளில்**
**சிறந்தநற் றவத்தாற் தேவி திருமேனி வயிற்றின் மைந்தன்**
**பிறந்தன னுலகம் போற்றப் பேரறிக் குருளை யன்னான்**

**பொருள் :** மனுவேந்தன் அறமும் பொருளும் என்ற இவற்றை அறநூல் வழியிலே தவறாமல் மேற்கொண்டு இவற்றிற்கு மாறாய மரங்களை அழித்து ஏனைய அரசர்கள் துதிக்கும்படி உலகைத்தைக் காத்து வந்தார். அந்நாளிலே அரசர் செய்த சிறந்த தவத்தின் பயனாக அவர் தேவியின் அழகிய திருவயிற்றிலே இளம் சிங்கம் போல உலகம் போற்றுமாறு மைந்தன் பிறந்தான்.

**வி-உரை :** அறநெறி வழாமல் புல்லி:- நெறியினின்றும் வழாமலும் பிறரையும் ஆறநெறி பிறழாமல் புல்லு வித்தும் சிறந்த நல்ல தவம்:- இஃது இவ்வரசன் மேற்பாட்டில் கூறியபடி சிவபெருமானை முன்னிட்ட தவத்திலே நின்றமை குறித்ததாம் நல்வினையின் பயனாகவே நன்மக்கட் பேறுண்டாகும்.

**"தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்**
**தத்தம் வினையான் வரும்" என்பது தமிழ்மறை.**

**திருமனிவாயிறு:-** இத்திருமைந்தன் பிறக்க இடமாயிற்றாதலின் அதனைத் திருவயிறு எனவும், மணி போன்றான் பிறத்தலின் மணிவயிறு எனவும் கூறினார். தேவி பெயர் **"இரத்தினமாலை"** என்பர். மைந்தன் பெயர் வீதிவிடங்கன் என்பர்.

**மைந்தன்:-** மைந்து (வல்லமை) உடையான் என்ற காரணத்தால் மைந்தன் என்று சுட்டி அறிவித்தமைக்கு ஏற்ப **"பேரறிக் குருளை யன்னான்"** என்றனர்.

**உலகம் போற்ற:-** உலகம் இவனைப் பாராட்ட என்றும், இவன் உலகத்தைக் காப்பாற்ற என்றும் ஆம்.

**திருநகரச்சிறப்பு பாடல் - 20**

**திங்கள்வெண் கவிகை மன்னன் திருவளர் கோயில் நின்று**
**மங்குல்தோய் மாடவிதி மன்இளம் குமரர் சூழக்**
**கொங்குஅலர் மாலை தாழ்ந்த குங்குமம் குலவு தோளான்**
**பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்தான்.**

**பொருள் :** மணம் பொருந்திய பூமாலைகளைச் சாத்திக் கலவைச் சாந்தை அணிந்த தோள்களை உடையவனாகி, மேகங்கள் படியும்படி உயர்ந்த மாடங்களை உடைய அரச வீதியிலே ஏனைய அரசிளங்குமாரர்கள் தன்னைச் சூழ்ந்து வரவும், ஆரவாரம் மிகுந்த சேனை சூழ்ந்து வரவும், சந்திரன் போன்ற வெண்கொற்றக் குடையையுடைய அரசரது அரண்மனையினின்றும் புறப்பட்டு தேரின் மேலேறி விளக்க மெய்திச் சென்றான்.

**வி-உரை :** திங்கள் வெண் கவிகை:- வெண்கொற்றக் குடை, வறுமை, கொடுமை, பிறவி முதலிய வெய்ங்களின் நீக்கித் தன் ஆணை நிழலின் கீழ் வையகத்தை குளிர்விப்பதால் அரசன் குடைக்குச் சந்திரனையே உவமானம் ஆக்குவர்.

**திருவளர் கோயில்:-** அரண்மனை உலகத்திலே திருவை வளர்க்கின்ற காரணத்தினாலே திருவளர் கோயில் என்றார். அறநெறி வழாமல் புல்லியும் மறங்கடிந்தும், வையகம் காத்தலினாலும் புற்றிடங் கொண்டார் பூசை நிபந்தம் ஆராய்ந்தது முதலிய சிவதருமத்தாலும், அரசன் அரண்மனையானது திரு என்றும் நீங்காது வளரும் கோயிலாயிற்று.

**தொடரும்**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**சூரன்போரின்போது இலங்கைச் சைவாலயங்களில் முருகப் பெருமானுக்கு ஆட்டுக்கடா வாகனம் இருப்பது சமய மரபாகுமா?**

முருகப்பெருமான் சூரபத்மன் சக்கரவாகப்பறவை (சி-ம்புள்) வடிவம் எடுத்து போர்க்களத்தில் நின்றபோது, இந்-திரன்மயிலாகவடிவம்எடுத்துமுருகப்பெருமானுக்குவாகன மாகினான் என்பதுதான் கந்தபுராணம். மயில் வாகனத்தில் இருந்தேசூரபத்மனின்சிம்புள்வடிவத்தைமுருகப்பெருமான் ஒறுத்தார் என்பதுதான் கந்தபுராணமாகும். இவற்றைப் பின்வரும் யுத்தகாண்டப் பாடல்களால் நன்கு தெளிய லாம். (பாடல் எண்கள் முழுமையான கந்தபுராணப் பாடல் களுக்கும் உரிய எண் வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளது.)

**நின்றிடு மஞ்ஞைப் புத்தேள் நெடுநிலங் கிழிய மேருக்**
**குன்றமும் புறஞ்சூழ் வெற்புங் குலைந்திடக் கரிகள் வீழ**
**வன்றிரை அளக்கர் நீத்தம் வறந்திடப் பணிகள் அஞ்சத்**
**தன்றுணைச் சிறகால் மோதி இனையன சாற்ற லுற்றான்.**
**(7666)**

**பொருள்:-** கந்தவேளின் திருமுன்பு மயில் உருவம் கொண்டு வந்து நின்ற இந்திரன், பெரிய பூமி பிளவு படவும் மேருமலையும் அதன் அருகே உள்ள மற்ற மலைகளும் நிலை குலையவும், திக்கு யானைகள் சோர்ந்து விழவும், வலிய அலைகளையுடைய கடல் வற்றவும், பாம்புகள் அஞ்சவும், தன் இரண்டு இறகுகளையும் அடித்துக்கொண்டு பின்வரும் இவற்றைச் சொல்லலா னான்.

**ஐயகேள் அமர ரெல்லாம் வழிபட அளியன் தன்பால்**
**செய்ய பேரருளை வைத்தாய் ஆதலிற் சிறுமை தீர்ந்தேன்**
**உய்யலாம் நெறியுங் கண்டேன் உன்னடி பரிக்கப் பெற்றேன்**
**பொய்யுலா மாய வாழ்க்கைப் புன்மையும் அகல்வன் மன்னோ.**
**(7667)**

**பொருள்:-** எம் இறைவரே, கேளுங்கள்! தேவர்கள் எல் லாம் வணங்க, ஏழையான என்னிடம் பேரருள் காட்டினீர். ஆதலால் சிறுமையினின்று நீங்கினேன். உய்யும் வழியையும் உணர்ந்தேன். உம் திருவடிகளையும் சுமக்கப்பெற்றேன். பொய்யுடன் கலந்த மாய வாழ்வான இழிவும் இதனால் தொலைப்பேன்.

**அல்லல்செய் தெமரை எல்லா மருஞ்சிறைப் படுத்தி வீட்டிப்**
**பல்வகை உலகை யாண்ட அவுணர்கோன் பறவை யாக்கை**
**செல்லுழிச் சென்று சென்று செருவினை இழைத்து வெல்வான்**
**ஒல்லையில் அடியேன் தன்மேல் ஏறுதி ஊர்தற் கென்றான்.**
**(7668)**

**பொருள்:-** எம் மக்களையெல்லாம் வருத்தி அரிய சிறையிலே அடைத்துக் கெடுத்து, பலவகையான உலகங்களை ஆண்ட சூரபத்மன், சிம்புள் பறவை உருவம் செல்லும் இடம் எல்லாம் போய்ப் போய்ப் போர் செய்து வெல்வதற்கு, விரைவாக அடியேன் மீது ஏறியருளுக.

**என்னலும் உளத்திற் செல்லும் இவுளிமான் தேரின் நீங்கிப்**
**பன்னிரு நாட்டத் தண்ணல் படர்சிறை மயூர மாகி**
**முன்னுறு மகவான் தன்மேல் மொய்ம்புடன் புக்கு வைகி**
**ஒன்னலன் செலவு நோக்கி உம்பரில் ஊர்த லுற்றான்.**
**(7669)**


**பொருள்:-** என்று மயில் பறவையாக வந்த இந்திரன் உரைத்ததும், மனவேகத்தைப் போல ஓடுகின்ற குதிரை பூட்டிய தேரினின்றும் இறங்கி, பன்னிரண்டு கண்களையுடைய முருகப்பெருமான், அகன்ற இறகுகளையுடைய மயிலாக எதிரில் வந்து நின்ற இந்திரன்மேல் வன்மையுடன் ஏறி இருந்து, பகைவனின் செயலைப் பார்த்து, வானவீதியில் மயிலைச் செலுத்தினார்.

**திருச்சிற்றம்பலம்**


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# The Importance of Daily Saiva Practice

Each dawn in Tamil homes once began with the gentle rhythm of traditional music and the sacred chants of **"Om Nama Sivaya".** For our ancestors, this was more than a ritual but a daily realignment of the soul. In the silence before sunrise, they greeted the divine, cleansed their minds, and reminded themselves of the impact of God in their lives.

Today, in the rush of modern life, we often mistake spirituality for something that belongs only to temples or special days. But the wisdom of Saivam, the world's oldest and most profound spiritual path, reminds us that the divine is not distant. The divine is always present, waiting to be awakened through daily practice.

Saivam is not just a faith, it is a philosophy that shaped Tamil civilisation for over two thousand years. From the verses of Thirumoolar's Thirumandiram to the hymns of the Nayanmars, Saivam has guided how Tamils lived, worked, and related to the world. Temples like Chidambaram, Thanjavur, and Madurai were not only places of worship but also centres of learning, music, astronomy, and art, living examples of the idea that spirituality and knowledge must coexist. And hence all these practices that have formed under Saivam can be practised daily, even in the confines of your house.

Lighting a lamp, chanting a Thevaaram, reading a verse from the Thiruvaasagam, or offering a simple prayer, these are not empty gestures. They are acts of discipline that purify the mind and connect us with something greater than ourselves. Through these actions, Saivism teaches that true spirituality lies not in grand displays but in silent consistency, in the quiet act of remembering Siva through thought, word, and deed.

But the beauty of this practice is that it need not be required to be practised only at a temple. You can pray and offer more blessings to the Lord at your house and, in my opinion, to an even greater extent than at a Temple. These days, at most temples, we are not even allowed to go physically touch and get close to god due to truly "Un-Saiva" restrictions placed on the normal people by temple officials. But at home you can pour milk and water of a Sivalingam and truly be able to practise is Saiva rituals.

In essence, the heart of Saivism lies not in where we worship, but in how we live. Whether in grand temples or the quiet corners of our homes, practising Saiva rituals daily, through prayer, song, or simple devotion, keeps us connected to Siva's presence within. True spirituality is not confined by walls or rituals; it is felt in sincerity, discipline, and love. When we light a lamp, chant a verse, or offer milk to the Sivalingam at home, we are not just performing a ritual; we are continuing an ancient Tamil tradition that unites the soul with the divine, reminding us that the Sivan is accessible to everyone and everywhere.

# Saiva Saint Arivattayar - The reckless




Arivattaya Nayanar, the 12th among the sixty-three Saivite saints, originally **'Tayanar'** was born in the fertile Chola land, in a village called Kanamangalam of the Kaveri Delta. He lived as a householder/ labourer and was known for his unblemished devotion to the Lord. His daily life was ordered by the fixation on worship, for he and his wife prepared, each day, the finest food they could obtain and brought it to the shrine of the Lord. The act of offering was not a ritual ornament to their lives, it was rather the very essence of their existence. More often than not, their finest offerings consisted, mangoes as the most luxurious of items offered.




Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu


## His test

As the seasons passed, adversity came. The rains ceased as it does, the fields hardened, and the household wealth slowly disappeared as it must. Arivattaya did not alter his observance. When there was no grain, he worked

as a field labourer; when he could no longer labour, he borrowed or begged. Whatever he obtained, he offered first at the temple. What remained, however little, sustained his incredibly emaciated body, but not his resolve.

One day, weakened by hunger and exhaustion, he set out for the temple carrying the simple meal that he had prepared for offering. Before he could reach even the shadow of the shrine, he stumbled in the middle of a field and fell. The food spilled upon the earth. Seeing that he could no longer perform his service, he felt that his life had lost its purpose. Pointless now in mere flesh bone and sorrow. What use is this mourning or melo drama, he contemplated. In silence, he drew the curved blade that he carried for his work and swung it right at his throat.

At that moment, a compassionate hand arrested the nayanar's scythe. The Lord halted the act, restored his strength, and revealed that the devotion of Arivattaya nayanar and his spouse had surpassed all offerings. The divine revelation is alleged to have also featured the sounds of scrumptious mangos being enjoyed by the supremest of all divinity!  In that instant, the couple was liberated from mortal life and united with the universal truth.

## Rememberence

The name Arivattayar, derived from the blade that he lifted in reckless passion, became the sign by which his devotion is remembered. His life is a meditation on faith, self value and emotional maturity, contemplating from contemporary knowledge. His offering would very easily be viewed as instability or absolutely dramatic by the modern reader, which is very justified. We have the opportunity here to glance at the significance of his story in relevance to the ones before and the ones after, in a tapestry of fluctuating extremes, that seem to keep getting testy in some parts of the Periya Puranam. Quite an interesting social hook, especially effective on the very first extensive recital and analysis of the Periya Puranam in the original period, thus we still boast of it now!

In his level of persistence, his action became knowledge for us, and knowledge became core mythology. The lesson of his life endures in the understanding that steadfast worship transforms deprivation into grace, and delivers an opportunity to meditate upon.

# Astronomy and the Science Behind Tamil Tradition of Celebrating Birthday Based on Birth Star (Nakshatra/Udu/Naalmeen) – A Brief Explanation with Evidence

Thiruchitrambalam

Last month's continuity...

**8. What is the Divine Purpose of Celebrating a Nakshatra Birthday?**

In Tamil astrology:

- Nakshatra days are considered auspicious time markers.
- Muhurtha (sacred moments) and festivals are scheduled accordingly.

Examples:

**i. Tamil New Year (Chithirai Vishu):**

**மேழ சித்திரைத் தமிழ் புத்தாண்டு** : "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" – (சிலப். இந்திரவிழவூரெடுத்த காதை,


**"Chithirai and the Chithirai star have come together..."**

(Silappathikaram, Indravizha section, 64)

அவைதாம் – சித்திரை முதலாச் சென்மாத மிரண்டா –வைத்தனவெண்ணிக் கொள்கவெனப.




**Dr. R. Sivakumar,**
(University Sains Malaysia, Penang, Malaysia)


The 12 Zodiac Constellations – (R. Sivakumar, 023a)

(நிகண். பிங்கலம் 212, சேந்தன் திவாகரம் 304)

“They are — the birth months starting from Chithirai are twelve in number — consider and accept them as such.” Also mentioned in Pingala Nighantu 212 and Senthan Thivakaram 304).

**ii. Thiruvonam Festival:**

**மாயோன் மேய ஓண நன்னாட - மது. 591**

**“Mayon (Vishnu) celebrates Thiruvonam…” (Maduraiyaanchi, 591)**

**iii. Karthigai Deepam Festival:**

**மதி நிறைந்து, அறுமீன் சேரும் அகல் இருள் நடு நாள் மறுகு விளக்குறுத்து, - (அகம்.141)**

**“In the dark of night, the full moon nears the six stars of Karthigai…” (Akananuru, 141)**

This is when people light lamps across homes and streets.

**iv. Thiruvadirai Festival:**

Celebrated in the Tamil month of Margazhi when the Thiruvadirai star occurs. It is known as Arudra Darshanam.

Such nakshatra-linked festivals show that Tamils used astronomical signs to determine divine timing. Nakshatra birthdays were seen as sacred days to:

- Meditate
- Offer charity
- Conduct rituals
- Avoid misfortunes

These days are considered energy empowerment moments, ideal for invoking divine grace.

**9. The Ancient Tamil Tradition of Celebrating Nakshatra Birthdays (Since the Sangam Era)**

**i. A poem from Muttollayiram tells that the king’s nakshatra birthday is a day of celebration, and even war is avoided:**

**கண்ணார் கதவந் திறமின் களிறொடுதேர்**
**பண்ணார் நடைப்புரவி பண்விடுமின் - நண்ணாதீர்**
**தேர்வேந்தன் தென்னன் திருவுத் திராடநாள்**
**போர்வேந்தன் பூசல் இலன்.**

**(முத்தொள்ளாயிரம்:7)**

**“Open your city gates, release the war-elephants and horses –**
**Today is the star birthday of the great southern king,**
**There shall be no battle.”**

**(Muttollayiram, 7)**

**ii. Purananuru (24:24–25) adds:**

**நின்று நிலைஇயர் நின்நாண்மீன், நில்லாது**
**படாஅச் செலீயர் பகைவர் மீனே (புறநானூறு : 24: 24-25)**

**“The nakshatra under which a person is born is the one visible at the time of birth.”**

**iii. Madurai Kanchi praises a Chola king’s nakshatra birthday:**

**கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்துந்**
**தண்கடல் நாடன் ஒண்பூங் கோதை**
**பெருநாள் இருக்கை விழுமியோர் குழீஇ**
**விழைவு கொள் கம்பலை கடுப்ப” (மதுரைக்காஞ்சி : 523-526)**

**“In the midst of grand celebration, wise men of all faiths gathered…**

**The king enjoyed listening to their debates.”**

**(Madurai Kanchi, 523–526)**

Also, a local chieftain named Nannan is said to have celebrated his birthday with grandeur, as mentioned in the same text (Madurai Kanchi, 615–619).

iv. Even Rajaraja Chola I (985–1014 CE) celebrated his birthday with rituals at the Thirumuthukunram Udaiyar temple every month on Thiruvadirai nakshatra. Land was donated for this purpose (as per inscriptions from Virudhachalam, Wikisource, 2025).

**10. Summary: The Significance of Nakshatra Birthdays**

A nakshatra birthday is calculated using the advanced Tamil model of Lunar-Solar-Sidereal Prediction (Panchangam-based). It is a day to:

- Restore psychological well-being
- Realign biological rhythms
- Perform meditative and spiritual practices
- Achieve a balance of energy (Shakti)

Tamil tradition, supported by modern chronobiology, confirms that these celebrations are not merely symbolic but scientifically and spiritually powerful.

**11 .Final Thought**

“There are a thousand ways to suppress thought,
But there is only one path to reach truth—
That is to mature, emerge, and journey with truth.”

“Uṇmaiyodu ū ūliyasē” – Sumerian Tamil Hymn by Sulgi (2094–2047 BCE)

Let our psyche always resonate and journey together with truth that matures within us.

“Truth persists, even if veiled or denied.”

References


1. Roenneberg, T., et al. (2007). The human circadian clock entrains to sun time. Nature Reviews Neuroscience.
2. Cajochen, C., et al. (2013). Evidence that the lunar cycle influences human sleep. Current Biology, 23(15), 1485–1488.
3. Raman, B. V. (n.d.). Studies in Astrology. Bangalore: Raman Publications.
4. Taittiriya Brahmana and Surya Siddhanta. Vedic sources for ancient time computation.
5. சூரியக் குடும்பம் (2009). Wikipedia, the Free Encyclopedia. Available at: https://ta.wikipedia.org/wiki/சூரியக்குடும்பம் (Accessed: 16 May 2021).
6. Star Constellations: The Zodiac (2017). Astronomy Trek. Available at: https://www.astronomytrek.com/star-constellations-the-zodiac/ (Accessed: 13 August 2020).
7. Sivakumar, R. (2023a). தமிழர் கால ஏரண மெய்யறிவு தொகுதி 1: புறக்காலத்தியல் (Tamilar Hermeneutic Logical Wisdom of Time Volume 1: Physical Time). Siva Publication, A-8, Cheran Nagar, Coimbatore – 641029, Tamil Nadu, India.
8. Sivakumar, R. (2023b).தமிழர் கால ஏரண மெய்யறிவு தொகுதி 2: அகக்காலத்தியல் (Tamilar Hermeneutic Logical Wisdom of Time Volume 2: Psychological Time). Siva Publication, A-8, Cheran Nagar, Coimbatore – 641029, Tamil Nadu, India.
9. சோழர் வரலாறு (2025). Wikisource. Available at: https://ta.wikisource.org/wiki/சோழர் வரலாறு / இராசேந்திரசோழன் #cite_ref-1 (Accessed: 23 June 2025).
10. சி. பாலசுப்பிரமணியன் (1977). இலக்கிய அணிகள் (ஆராய்ச்சிக் கட்டுரைகள்). Project Madurai. Available at: https://www.projectmadurai.org/pm_etexts/utf8/pmuni0712.html (Accessed: 23 June 2025).


**Complete**

# Actual status of 'I' the soul



## Last Month Summary:

***While planning to go out and play, Sivakan and his friends ended up discussing whether their thoughts and decisions truly belonged to them or to the mind. Through their conversation, they realised that the mind goes through stages like thinking, doubt, motivation, and decision making, yet the mind itself has no independent intelligence. It functions only as a tool, just like the senses. They learned that the mind takes on different names for different roles, mind, intellect, memory and ego. The soul, however, is the real experiencer, using the mind and senses as instruments. Therefore, they concluded that the soul is separate from the mind and is the true "I".***

The next day, we met again and looked back on what we had discussed previously. We had been exploring the idea that the soul exists separately from the body. Although it resides within the body and enables it to function, the body cannot operate without it.

To reinforce our understanding, we decided to summarise what we had learned so far. What we refer to as 'I' is the soul, the conscious self that exists within the body, but is not the body itself. I is not the sense organs, the breath, the mind, or any combination of these elements. I is not Sivan either.

The soul is distinct from all such components. It is the conscious, ever existing self. The body, the senses, the breath, and the internal faculties are instruments that allow the soul to experience and understand the world.

Through our discussion, we clarified the roles of three eternal realities: the Lord (Pathi), the soul (Pasu), and the binding forces of the world (Paasam). Each exists independently and has its own unique function.

**Saiva Philosophy Reference:** The takeaway of this story is that the soul (pasu) is a distinct, eternally existing reality separate from the body, senses, mind, and even the vital forces that enable physical life. While the soul uses these instruments to act and experience, it remains the conscious knower within. Saiva philosophy also affirms the eternal existence of three fundamental realities: Sivan (Pathi), the soul (pasu), and the bonds (paasam) of ignorance, karma, and illusion. Understanding this distinction is essential to recognising the soul's true nature and the path towards liberation.

# தென்னாட்டு நிகழ்வுகள்



தமிழ்நாடு சேலம் அறுபத்துமூவர் சிவனடியார் திருக்கூட்டத்தின் அடியார்கள் வருகை (14-10-2025)



கந்தன் கவின் அறுமைப் பிறைநாள் (கந்தசஷ்டி) (27-10-2025)



தென்னாட்டில் பெரியபுராண முற்றோதல் ஆரம்பம் (27-10-2025)



இராசராச சோழனின் 1040 ஆவது சதய விழா (01-11-2025)



ஒசுத்திரேலியாவில் ஏடு தொடக்கல் (03-10-2025)



ஒசுத்திரேலியா சிட்னியில் புதுமனை புகுவிழா (29-09-2025)

# தென்னாட்டு நிகழ்வுகள்













புரட்டாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (06-10-2025)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் அறுபத்து மூன்றாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 19ம் நாள் நிறைமதி அன்று (05-11-2025 புதன்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org